பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 08 | சனிக்கிழமை 23.12.2017 | கதிர் 48

உங்கள் நிறுவனங்களுக்கு
திறமையான பணியாளர்களை
குறுகிய காலத்தில்
பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789
c/400

## வேட்பாளர்களின் விவரம் திரட்டுகிறதா இராணுவம்?



யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களை இராணுவத்தினர் திரட்டுகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முன்தினம் 12 மணியுடன் முடிவடைந்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பாளர்களின் பெயர் விவரங்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனை சீருடையிலும் சிவில் உடையிலும் வந்த இராணுவத்தினர் புகைப்படம் எடுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் இருவருக்கு இருதய சத்திர சிகிச்சை!


### முதன்முறையாக வடக்கில் துணிகரச் சாதனை



யாழ்ப்பாணம்,டிசெ.23

வடக்கில் முதல்முறையாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ நிபுணர் சிதம்பரநாதன் முகுந்தன் தலைமையிலான மருத்துவர்கள் குழுவால் இளம் வயதினர் இருவருக்கு இருதய சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது. சத்திர சிகிச்சை மேற்கொள் பக்கம் 18



ஞானசார தேரருக்கு வணக்கம் செலுத்தும் வடக்கு ஆளுநர்

### இன, மத, பிரிவினைவாதம் இல்லாத

# நல்லிணக்கத்தை யாழில் இருந்து ஆரம்பிப்போம்

### முற்றவெளியில் வைத்துக் கூறினார் ஞானசாரர்

( எஸ்.நிதர்ஷன் )

யாழ்ப்பாணம்,டிசெம்பர் 23

**இன, மத, பிரிவினைவாதம் இல்லாத நல்லிணக்கத்தை யாழ்ப்பாணத்தில் இருந்து நாம் ஆரம்பிக்கவேண்டும்.**

**- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் வைத்துத் தெரிவித்தார் பொதுபலசேனாவின் தலைவர் ஞானசார தேரர்.** பக்கம் 03

## மேலும் சில காணிகளை விடுவிக்கும் இராணுவம்

### யாழில் தளபதி உறுதி



யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்ப்பாண மாவட்டத்தில் ராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் மேலும் சிலவற்றை விடுவிப்பது தொடர்பில் சாதகமான பதில் விரைவில் வழங்கப்படும்.

- இவ்வாறு இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க யாழ்ப்பாண மாவட்ட செயலரிடம் உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள பக்கம் 18

## மக்களுக்கு ஒருபோதுமே உதவாது புதிய அரசமைப்பு

### ஞானசார தேரர் யாழில் சாடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ 23

நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையை மழுங்கடிக்கும் நோக்கத்தில் சில சில சந்தர்ப்பங்களில் புதிய அரசமைப்புத் தொடர்பான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. இப்போதைய புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களுக்கு அக்கறையில்லை. அது மக்களுக்கு உதவப்போவதுமில்லை.

– இவ்வாறு தெரிவித்தார் பொதுபல சேனாவின் தலைவர் பக்கம் 18

## நிறம் மாற்றிய வாகனத்திலேயே கடத்தப்பட்டனர் 5 மாணவர்கள்

### தஸநாயக்காவின் வழக்கில் இன்றுபெக்டர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ 23

2008ஆம் ஆண்டுதமிழ் மாணவர்கள் ஐவர் உட்பட 11 பேர் கடத்தப்பட்ட வானுக்கு பக்கம் 18

## சிவமோகன் எம்.பியின் ஆதரவாளர்கள் புளொட் பெண்ணுக்குச் செய்தவை என்ன?

### தெரிவத்தாட்சி அலுவலரிடம் விவரமாக முறைப்பாடு

முல்லைத்தீவு,டிசெ.23

உள்ளூராட்சித் தேர்தலில் புளொட் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட விருந்த பெண் ஒருவர் கடத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பக்கம் 03

## முற்றவெளியில் தேரரின் உடலை தகனம் செய்ய நீதிமன்று அனுமதி

### தடை கோரிய மனு தள்ளுபடி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,டிசெ. 23

யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதியின்பூதவுடலையாழ்ப்பாணம்முற்றவெளியில் தகனம் செய்யத் தடை கோரி சிவிலியன்கள் இருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது. பக்கம் 18

## பரந்தனில் விபத்து; ஒருவர் சாவு!

கிளிநொச்சி,டிசெ.23

கிளிநொச்சி, பூநகரி–பரந்தன் வீதியில் நல்லூர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந் தார். மற்றுமொருவர் படுகாயமடைந் தார். சாவகச்சேரியிலிருந்து பூநகரி ஊடாகப் பக்கம் 18

## கடத்தப்பட்ட புளொட் பெண் வைத்தியசாலையில் அனுமதி

### அரசியல் தலைவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல்



முல்லைத்தீவு,டிசெ.23

தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்களால் கடத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட பெண் மயக்கமடைந்தமையால் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரை வைத்தியசாலைக்குச் பக்கம் 03

## முற்றவெளியில் நேற்று தேரரின் உடல் தகனம்



யாழ்ப்பாணம், டிசெ 23

யாழ்ப்பாணம் நாகவிகாரை விகாராதிபதி மீகாஹா யந்துர ஞானரத்தன தேரரின் உடல் நேற்று மாலை பக்கம் 18

## சம்பந்தன் சுகவீனம்

கொழும்பு, டிசெ.23

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

திருகோணமலையில் இருந்துகொழும்பு வந்த அவர் திடீரெனக் பக்கம் 18

## வடக்கில் நடப்பது இராணுவ ஆட்சியே

### சட்டத்தரணி மணிவண்ணன் சாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்.நாகவிகாராதிபதியின் உடல் இராணுவத்தின் ஏற்பாட்டில் முற்ற வெளியில் தகனம் செய்யப்பட்டமை வடக்கு மக் கள் இன்னும் இராணுவ அடக்குமுறைக்குள்ளேயே உள்ளார்கள் என்பதை பக்கம் 18

# வீணைச் சின்னத்துக்கு ஆணை கிடைத்தால் எமக்கான அதிகாரத்தின் எல்லை வானமாகும்!

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

வீணைச் சின்னத்திலான எமது கட்சி வெற்றிபெறும் பட்சத்தில் எமக்கான அதிகாரத்தின் எல்லை வானமாகத்தான் இருக்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.




யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாம் ஈட்டிக்கொள்கின்ற வெற்றியின் அத்திபாரமாகவே இன்றைய கூட்டத்தை நான் நோக்குகின்றேன்.

நாம் பல சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்து மக்களின் நலன் சார்ந்த பல்வேறு செயற்திட்டங்களை செயற்படுத்திக் காட்டியுள்ளோம். இந்தத் தேர்தலில் நாம் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடனான உழைப்பைப் பயன்படுத்தி வெற்றியையே எமது தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படுவோம்.

அந்தவகையில், மக்களின் வெற்றியே வீணையின் வெற்றியாகவும் வீணையின் வெற்றியே மக்களின் வெற்றியாகவும் மக்களிடம் எமது கருத்துக்களை முன்கொண்டு செல்வோம்.



குறிப்பாக ஒவ்வொரு வாக்கும் பெறுமதியானது என்பதுடன் வாக்களிப்பதன் அவசியத்தை மக்களுக்கு தெளிவு படுத்தவேண்டியதும் மக்களுக்கு வலியுறுத்த வேண்டியதும் அவசியம்.

அந்தவகையில், ஈ.பி.டி.பி வேறு மக்கள் வேறு என்றோ அல்லது மக்கள் வேறு ஈ.பி.டி.பி. வேறு என்றோ அல்ல என்பதை மக்களுக்கு தெளிவு படுத்தல் வேண்டும்.

ஈ.பி.டி.பியின் வெற்றியென்பது மக்களின் வெற்றியென்பதையும் ஒவ்வொருவருக்கும் உணர்த்தவேண்டும்.

நாம் எப்போதும் மக்களுடன் இருந்து மக்களுக்கான சேவைகளை எந்த நெருக்கடியான காலகட்டங்களிலும் முன்னெடுத்து வந்திருக்கின்றோம் என்பதை மக்கள் தெரிந்து கொண்டுள்ள போதிலும், எம்மால் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் மக்களிடம் எடுத்துக்கூற வேண்டும்.

அதுமட்டுமன்றி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் எமக்கு பூரண ஆதரவுப் பலத்தைத்தந்து எமது வெற்றியை உறுதிசெய்வார்களேயானால் நிச்சயம் மக்களின் வாழ்வில் பெரிய மாற்றங்களையும் ஏற்றங்களையும் நிச்சயம் எம்மால் ஏற்படுத்த முடியும்.

அந்தவகையில், நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வீணைச் சின்னத்திலான எமது கட்சி வெற்றிபெறும் பட்சத்தில் எமது அதிகாரத்தின் எல்லை நிச்சயம் வானமாகத்தான் இருக்க முடியும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் குடிசை ஒன்றை தூக்கி வீசியது பலத்த காற்று



மன்னார், டிசெ. 23

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தாழ்வுபாடு கிராமத்தில் திடீரென வீசிய பலத்த காற்று காரணமாக அந்தப் பகுதியிலுள்ள உள்ள குடிசை ஒன்று சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கணவர் நேற்றுக் காலை தொழிலுக்குச் சென்றிருந்த நிலையில் மனைவி மற்றும் நான்கு பிள்ளைகள் வீட்டில் இருந்தபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

பலத்த காற்றினால் அவர்களது வீடு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், வீட்டினுள் காணப்பட்ட பொருள்களும் சேதமடைந்துள்ளன.

இது தொடர்பில் கிராம அலுவலகருக்கு தகவல் வழங்கப் பட்டதையடுத்து கிராம அலுவலகர் சேதமடைந்த வீட்டைப் பார்வையிட்டார், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவினரும் வீட்டைப் பார்வையிட்டனர்.

இதேவேளை, குறித்த குடும் பத்தினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். தாழ்வுபாடுக் கிராமத்தில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ள போதும், இந்தக் குடும்பத்துக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

*கூட்டமைப்புக்குள் குட்டி ராஜாக்களா?*

# ரெலோவின் கருத்தை மறுக்கின்றார் மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி

யாழ்ப்பாணம் டிசெ.23

“தமிழ்க்கூட்டமைப்புக்குள் பல குட்டி ராஜாக்கள் தலையெடுத்துத் தர்பார் நடத்துகின்றமையை அவதானிக்க முடிகிறது. அரசியல் ரீதியில் இது ஆரோக்கியமானதல்ல என ரெலோ செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா கூறிய கருத்து நேற்றைய காலைக் கதிரின் முதற்பக்கச் செய்தியாக வெளிவந்திருந்தது. அவரது இந்தக் கருத்தை மறுக்கும் வகையில் தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர், அ. பரஞ் சோதி செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தமிழரசுக் கட்சியில் பல குட்டி ராஜாக்கள் தோன்றியிருக்கின்றனர். இது கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு நல்லதல்ல.’ – அவ்வாறாக ரெலோ செயலாளர் நாயகம் தமது கருத்தைப் பகிர்ந்துள்ளார். அது எமது கட்சி ஆதரவாளர் மத்தியில் மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமது கட்சியின் அரசியல் கட்டமைப்புக்களை அறியாது’ எழுந்தமானமாக உதயமான மற்றைய கட்சிகளைப்போல் கணித்து, அறிக்கை வெளியிடுவதென்பது உண்மையில் ஒற்றுமைக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எமக்கு எந்த ஐயமுமில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லாத் தொகுதிகளிலும் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட கிளைகள் உண்டு. அதற்கு கீழாக கிராமந்தோறும் மூலக் கிளைகளும் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக மாவட்டக்கிளைகளும் நிறுவப்பட்டுள்ளன. இவையூடாகவே எங்கள் அரசியல் நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. இக்கிளைகளிலே ஏதாவது பிரச்சினைகள், பிணக்குகள் ஏற்படும் போது கட்சித் தலைமை அதில் தலையிட்டுத் தீர்த்து வைக்கும். அதுவே உண்மையான ஜனநாயக நடைமுறையாகும்.

தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலிலும் கூட்டாகத் தேர்தலைச் சந்திப்பதில் எமது அரசியல் கட்டமைப்புக்களுக்கு அவ்வளவாக ஆர்வமில்லாத நிலையிலும் தலைமையின் கட்டளைக்கமைவாக நாம் அதிகளவில் விட்டுக்கொடுத்து ஒரு தீர்க்கமான நிலையில் தேர்தல்களைச் சந்திக்கின்றோம். இருந்தாலும் தலைமை செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாகத் தமக்கு ஒதுக்கப்பட்ட வட்டாரங்களின் வேட்பாளர்களை நியமிக்கும் ஜனநாயக உரிமையைத் தொகுதிக் கிளைகளுக்குத் தமிழரசுக் கட்சித் தலைமை வழங்கியிருந்தது. அதற்கமைவாகவே தொகுதிக் கிளைகளும் செயற்பட்டு வருகின்றன.

ஆகவே, எமது கிளைகளின் தலைமைகளை குட்டிராஜாக்களாக விளித்து அவர்களை விமர்சிக்கின்றமை கூட்டமைப்பின் வெற்றிக்கு பாத கத்தை உருவாக்கும் என்பதை எனது மதிப்புக்குரிய ஸ்ரீகாந்தா ஐயா புரிந்துகொள்ள வேண்டுமென விநயமாக வேண்டுகிறேன். ஏனெனில் கிராமங்களில் செல்வாக்குச் செலுத்தும் இக் கிளைகள் தான் கூட்டமைப்பிலுள்ள எல்லாக் கட்சிகளும் வெற்றிக்காகவும் உழைக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருந்தால் தான் வீட்டை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லலாம் என்றுள்ளது.

(இ)

# அடுத்த வருடத்திற்கான பாடப் புத்தக விநியோகம்!

கொழும்பு , டிசெ. 23

2018 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடப் புத்தகங்கள் விநியோகிக்கும் பணிகள் வெற்றிகரமாக இடம்பெற்று வருகிள்றன என கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் பத்மினி நாளிக்கா வெலிவத்த தெரிவித்துள்ளார்.

இம்முறை தரம் மூன்று பாடப் புத்தகங்கள் புதிதாக அச்சிடப்பட்டுள்ளன. தரம் ஒன்பதுக்கான பாடப் புத்தக விநியோகப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பாடப் புத்தகங்கள் உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. பாடப் புத்தக விநியோகம் தொடர்பான தேசிய வைபவம் அடுத்த மாதம் 11ஆம் திகதி கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# தமிழரின் உணர்வை மலினப்படுத்தவே முற்றவெளியில் தேரரின் உடல் தகனம்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் சாடல்

யாழ்ப்பாணம் முற்றவெளியில் விகாராதிபதியின் பூதவுடலை தகனம் செய்வது தமிழ் மக்களின் உணர்வுகளை மலினப்படுத்தும் ஒரு நடவடிக்கை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரசு ஒத்துழைப்பை வழங்குகிறது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

தமிழ் மக்களின்பண்பாட்டில் இறந்தவர்களுக்கான இறுதிக் கிரியைகள், தகனம் செய்யும் முறைகள் தனிச்சிறப்பானவை. மக்கள் கூடுமிடங்கள், ஆலயங்கள் போன்றவற்றில் தகனங்கள், இறுதிக் கிரியைகள் செய்வதில்லை. நிலை இவ்வாறிருக்க, யாழ்.முற்றவெளி மைதானத்தில் ஆரியகுளம் நாகவிகாரையின் விகாராதிபதியின் உடலைத் தகனம் செய்ய இராணுவம் முயற்சிக்கிறது. இது தமிழ் மக்களின் பண்பாட்டை மலினப்படுத்துவதாகவே அமையும். மேலும் இவ்வாறான நடவடிக்கைகளினால் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உருவாகாது. மாறாக விரிசல் நிலையே அதிகரிக்கும்.

இராணுவம் பௌத்தமே மேலானது, வடமாகாணம் தங்களுடைய மண் என்னும் சிந்தனையில் செயற்படுகிறது. அதனை இலங்கை அரசும் அங்கீகரித்துத் தேவையான ஒத்துழைப்புக்களையும் தொடர்ச்சியாக இராணுவத்துக்குக் கொடுக்கிறது. முற்றவெளி மைதானம் தொல்லியல் திணைக்களத்திற்கு கீழ் உள்ளது. எனவே இந்த தகனக் கிரியைதொடர்பாகஅவர்களிடம் கேட்டபோது தமக்கு ஒன்றும் தெரியாது எனக் கூறுகிறார்கள்.

யாழ்.மாநகரசபையிடம் கேட்டால் அவர்களும் தெரியாது என்கிறார்கள். எனவே காணி தொல்லியல் திணைக்களத்திற்கு சொந்தமானது என்றாலும், வடக்கில் ஓர் அரசு உள்ளது. எனவே இந்த தகனக் கிரியைகள் தொடர்பாக மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட மாகாண அரசுடன்பேசப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு ஒன்றும் பேசப்படாமல் இராணுவம் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது.

மக்கள் கூடும் யாழ்.நகரில், முனியப்பர் கோவிலுக்கு அருகில் இந்த தகனம் நடக்கிறது. அதற்கு அதிகாரம் கொடுத்தது யார்? இது மட்டுமல்ல தகனக் கிரியை நிறைவடைந்ததும் அங்கே விகாராதிபதிக்காக ஒரு விகாரையை அல்லது நினைவிடத்தையும் கூட இந்த இராணுவம்அமைக்கப்போகின்றது. எனவே எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக கேள்வி எழுப்ப வேண்டும் – என்றார். (ஐ)

# முற்றவெளியில் தேரர் உடல் தகனம்: இன முரண்பாட்டை முற்ற வைக்கும்!

## எச்சரிக்கின்றார் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம் நாகவிகாரை விகாரதிபதியின் பூதவுடலை யாழ்ப்பாணம் முற்றவெளியில், முனியப்பர்கோவிலுக்குப் பக்கத்தில், மக்கள் கூடும் இடத்தில் இராணுவத் தலையீடு மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியில் தகனம் செய்யும் நடவடிக்கை பலவந்தமாக முன்னெடுக்கப்பட்டமை தமிழ் மக்களின் பண்பாட்டை மலினப்படுத்தி கோபப்படுத்தும் செயலன்றி வேறில்லை.

–இவ்வாறுசீற்றத்துடன்கருத்து வெளியிட்டிருக்கின்றார் யாழ் . மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

“இது நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வுச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் போக்கல்ல; சமாதானத்தை ஏற்படுத்தும் எத்தனம் அல்ல.

“தேசிய ஒருமைப்பாட்டுக்கு என்று ஓர் அமைச்சை ஏற்படுத்தி விட்டு இத்தகைய செயல்களை அடாவடித்தனமாக – எதேச்சாதிகாரமாக – செய்கின்றமை தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தாது. நிரந்தரப்பிளவையும், இன முரண்பாட்டையுமே தீவிரப்படுத்தும்.

வடக்குக்கு என ஒரு மாகாண அரசு இருகின்றபோது, தென்னிலங்கை அரசின் கைப்பாவையாக இயங்கும் தொல்லியல் திணைக்களத்தை வைத்துக் கொண்டு, மத, சமூக முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில் இத்தகைய நடவடிக்கைகளை அதிகார மேலாண்மையோடு மேற்கொள்வது தமிழ் மக்களைச் சீண்டிப் பார்க்கும் செயலன்றி வேறில்லை. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தேரரின் பூதவுடல்எரித்த இடம் என்று கூறி, அதற்கு உரிமை கொண்டாடி, அடுத்த கட்ட நடவடிக்கையில் இராணுவமோ, வேறு தரப்புகளோ இறங்குமாயின் விளைவுகள் விபரீதமாகும். – இப்படி எச்சரித்துள்ளார் சிறீதரன் எம்.பி. (உ)

# வேட்பாளர்களில் அநேகமானோர் குற்றவாளிகளே என்கிறது பவ்ரல்

கொழும்பு, டிசெ. 23

உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளவர்களில் குற்றவாளிகள் உள்ளனர் என பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

மாட்டுத் திருடர்கள், கொள்ளையர்கள், நிதி மோசடிக் காரர்கள், சட்ட முரணான போதைப் பொருள் வியாபாரிகள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்கள் காணப்படுகின்றனர் பவ்ரல் அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின்நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இத்தகையவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் உள்ளனர் எனவும், தகவல்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டதும் அவர்களின் பெயர்களை வெளியிடவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இத்தகையவர்களுக்கு வாக்களிப்பதிலிருந்து தவிர்த்து கொள்ளுமாறு தாம் வாக்காளர்களைக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# ரயிலுடன் கார் மோதியதில் ஒருவர் சாவு

நீர்கொழும்பு, கட்டுவப் பிரதேசத்தில் பயணிகள் ரயிலில் கார் ஒன்று மோதியதில் அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் பலத்த காயமடைந்த மூன்று பேர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சாதாரண ரயில் நீர்கொழும்பு கட்டுவ பகுதியில் கடந்த போது கடவையில் நுழைந்த கார் மோதுண்டது. 4 பேர் வாகனத்தினுள் பயணித்த நிலையில் ஒருவர் உயிரிழந்தார் எனத் தெரியவந்துள்ளது. மற்றைய மூன்று பேரும் பலத்த காயமடைந்த நிலையில், தற்போது சிகிச்சைபெற்று வருகின்றனர். வாகனத்தைச் செலுத்தியவர் கைத்தொலைபேசியைக் காதில் வைத்த வண்ணம் சென்றமையுடன், பாதசாரிகள் எச்சரித்தும் அவதானிக்காது சென்றார் என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (ஐ)

## கடத்தப்பட்ட

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று அரசியல் தலைவர்கள் பார்வையிட்டு ஆறுதல் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குப் புளொட் அமைப்பினால் நியமிக்கப்பட்ட பெண்ணான பா.மஞ்சுளா தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்களால் கடத்தப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டு வேட்புமனுவில் கையெழுத்திடாமல் தடுக்கப்பட்டார்.

இதுதொடர்பில்அவர்பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டை அடுத்துச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் திரும்பப் பெறுமாறு கோரி சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் ஆதரவாளர்களால் அவர் தொடர்ச்சியாக மிரட்டப்பட்டார். இதன் பின்னர்தான் பொலிஸில் வழங்கிய முறைப் பாட்டைத் திரும்பப் பெறஓட்டோவில்சென்றவேளை அவர் மயக்கமடைந்துள்ளார்.

அவர் உடனடியாகப் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காகமுல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இவரிடம் நேற்றுச் சென்ற பொலிஸார், கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரை நீதிமன்றில் முற்படுத்தாமல் விடுவிப்பதற்காகக் கடிதம் ஒன்றில் கையொப்பம் வாங்கிச் சென்றனர் எனக் கூறப்பட்டது.

மூன்று பிள்ளைகளுக்கும் தனக்கும் சம்பந்தப்பட்ட நபரால் இனிவரும் காலங்களில் அச்சுறுத்தல் ஏதும் இருக்காது என்பதை உறுதி செய்ய வேண்டும் என அவர் கையொப்பம் வாங்க வந்த பொலிஸாரிடம் வலியுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையில் பெண்ணை வடக்கு மாகாண விவசாய அமைச்சர்க.சிவனேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்து.ரவிகன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறியுள்ளனர்.

இந்த மோசமான சம்பவத்தைத் தாம் வன்மையாகக் கண்டிக்கிறார்கள் எனவும், இதற்குக் காரணமானவர்கள் மீது நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (ஐ)

## சிவமோகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணசபை விவசாய அமைச்சரும் புளொட் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளருமான கந்தையா சிவநேசன் கடிதம் மூலம் இந்த முறைப்பாட்டைச்செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

உள்ளூராட்சித் தேர்த லில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி, புளொட் மற்றும் ரெலோ ஆகிய அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் கூட்டிணைந்து தமிழரசுக் கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் இரண்டாம் வட்டாரமான பாரதிநகர் வட்டாரத்தில், எமது கட்சியாகிய புளொட் சார்பாக இந்தக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்குதிருமதி. பத்மநாதன் மஞ்சுளா (வள்ளுவர்புரம், விஸ்வமடு) என்பவரை வட்டாரத்தின் நேரடிப் பெண் வேட்பாளராக நியமிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பெண் வேட்பாளர் தனது நியமனப் பத்திரத்தில் கையொப்பமிடுவதற்கு, தமிழரசுகட்சித் தலைமையினரின் வேண்டுகோளுக்கு இணங்க நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் இல்லம் அமைந்துள்ள இடத்திற்கு டிசெம்பர் 20ஆம் திகதி முற்பகலில் சென்றிருந்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் முன்னிலையிலும் அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவு மற்றும்பொலிஸாரின்பிரசன்னத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் கைக்கூலிகளினால் அவர் உடல், உள துன்புறுத்தலுக்கும் சித்திரவதைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்.

இவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் அலுவலகத்திற்கு செல்லும்போது கிருஷ்ணகுமார் என்பவரும், வேட்புமனுவில்கையொப்பமிடக் கூடாது என அச்சுறுத்தல்கள் விடுத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் முன்னிலையிலும் வேட்புமனுவில்கையொப்பமிடக் கூடாது என அவர் அச்சுறுத்தப்பட்டமையுடன், மீறிக் கையொப்பம் இடும் பட்சத்தில் ரயர்போட்டு எரித்து விடுவார்கள் எனவும், பிள்ளைகள் விளைவுகளைச் சந்திப்பார்கள் எனவும் அச்சுறுத்தப்பட்டார். அடித்து தள்ளி விழுத்தி கையொப்பம் இட அனுமதிக்காமல் விரட்டிக் கலைக்கப்பட்டார்.

அவர் வீடு திரும்பும்போது, ஜெயதீபன் என்பவரால் சட்டத்திற்கு முரணாகத் தடுத்து வைக்கப்பட்டமையுடன் தாக்குதலுக்கும் உள்ளானார். இவர் கடத்தப்பட்டு வாய் மற்றும் கை, கால்கள் கட்டப்பட்டு ஜன்னலுடன் பிணைக்கப்பட்டநிலையில்வைக்கப்பட்டிருந்தார். இந்தத்தருணங்களில்கடத்தியநபர்தொலைபேசியையும் கையகப்படுத்திக் கொண்டார். வேட்புமனுவில் கையொப்பம் இடும் நிகழ்வுகள் முடிவுறும் வரை பூட்டி வைத்துப் பின்னர் மாலை ஆறு மணியின் பின்னர் விடுவிக்கப் பட்டார்.

நலன்விரும்பிகளுடன்கலந்தாலோசனை செய்த பின்பு மறுநாள் டிசெம்பர் 21 காலை புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் அவரால் முறைபாடு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தரும், நிலையப் பொறுப்பதிகாரியும் இந்த முறைப்பாட்டை ஒரு தனிப்பட்ட பிரச்சினையாகப் பதிந்துபாதிக்கப்பட்டபெண்ணை வைத்தியசாலைக்குச் செல்லுமாறு கூறினர்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்சிவமோகன்மற்றும் சுதர்சன் ஆகியோர் இவரது முறைப்பாட்டைச் சமரசமாக முடிப்பதற்காக பாதிக்கப்பட்ட பெண்ணை அழுத்தங்களுக்கு உள்ளாக்கின்றனர்.

இப் பெண்ணின் வீட்டின் அருகாமையிலும், போகும் பாதைகளிலும் ரவடிகளைக் கொண்டு உடல, உள உளைக்ஷலுக்குள்ளாக்கும்செயல்களும்நிகழ்கின்றன.

திருமதிபத்மநாதன்மஞ்சுளா மீதான தாக்குதல்களும், வன்முறை நடவடிக்கைகளும் இவரது ஜனநாயக உரிமைகளை அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதுடன் மறுதலிக்கும் நடவடிக்கையாகவே நாங்கள் கருதுகின்றோம்.

தேர்தலில் பங்குகொண்டு, சமூகத்தில் தனது கடமைகளை செய்றபடுத்த முன்வரும் பெண் வேட்பாளருக்கு நடந்த இந்தக் கொடுமையான நிகழ்வு பெண்களுக்கான வகிபாகத்தை மறுக்கும் செயற்பாடு ஆகும். பெண்களின் பங்குபற்றலை முன்னிலை படுத்தும் சட்டச் செயற்பாடுகளைக் குலைக்கும் நிகழ்வாகவேஇதனைக்கருதமுடியும்.

திருமதிபத்மநாதன்மஞ்சுளா மீதான வன்முறை நடவடிக்கையைத் தேர்தல் சட்ட அத்துமீறலாகப் பதிவு செய்து தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளுவதுடன் , உரிய பரிகாரத்தினையும்பாதுகாப்பையும்உறுதிப்படுத்துமாறும் விநயமுடன் கேட்டுக்கொள்கின்றேன்–என்றுள்ளது. (ஐ)

## நல்லிணக்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். விகாராதிபதியின் உடல் தகனம் செய்யும் நிகழ்வு பல்வேறு சர்ச்சைகள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்று யாழ்ப்பாணத்தில்நடைபெற்றது. பொதுபல சேனாவின் தலைவர் ஞானசாரதேரரும் இதில்கலந்துகொண்டார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

கடந்த சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்த யாழ். விகாராதிபதி நீண்ட காலமாக யாழ். நாக விகாரையிலேயே இருந்து வந்தார். அவரின் இறுதி நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி இருந்ததால் அந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளோம்.

இவ்வாறு நாங்கள் யாழ்ப்பாணம் வருகின்றபோது ஒரு செய்தியைக் கேட்டு ஆச்சரியப்பட்டோம். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சி நாக விகாரையில் ஒன்று கூடுவதற்கும் முற்றவெளியில் தேரரின் உடலைத் தகனம் செய்வதற்கும் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறச் சென்றுள்ள எனக் கேள்விப்பட்டோம்.

இங்கு பாலங்கள் மற்றும் பாதைகள் போட்டால் மட்டும் போதாது. எல்லா இனமக்களும் இன, மத பேதங்கள் இல்லாமல் வாழ்வதற்கு நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று நாம் நினைக்கிறோம். அவ்வாறு ஏற்படுத்தப்படும் நல்லிணக்கம் பிரிவினைவாதம் என்ற விசம் இல்லாத நல்லிணக்கமாக இருக்க வேண்டும். அதனை யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பிக்கவேண்டும்.

உயிரிழந்த விகாராதிபதி போர்க்காலத்திலும்சரி அதற்குப் பின்னரான காலத்திலும் சரி தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற எந்தவித இன, மத வேறுபாடுகளுமற்றுச்செயற்பட்டுவந்தவர். அவ்வாறானதொருவரின் இறுதி நிகழ்வுக்கு எதிராகத் தமிழக் காங்கிரஸ் கட்சி நீதிமன்றம் சென்றுள்ளமை வருத்தமளிக்கிறது – என்றார். (ஐ –7)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை



ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## முதல்வர் விக்கியின் திராணி

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பாணியில் தென்னிலங்கையைப் பார்த்துக் கேள்வி எழுப்பும் ஒரு சில தலைவர்களாவது - மக்கள் பிரதிநிதிகளாவது - தமிழர்கள் மத்தியில் இருந்தால், நமது தமிழர் தரப்புக்கு விமோசனம் கிட்டுமோ என்னவோ?

சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேராவுக்கு அவர் நேற்று அனுப்பியுள்ள பதில் கடிதம் நியாயமான பல விடயங்களைப் பிரதிபலிக்கத் தவறவில்லை.

சில விடயங்களுக்குச் சுடச் சுட பதில் கொடுப்பது அரசியலில் தேவைப்பட்ட ஒன்றாகவே இன்று இருக்கின்றது.

மீதொட்டுமுல்ல குப்பைமேடு சரிந்து அப்பகுதியில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டபோது, அவசர அவசரமாக இந்த அரசு மேற்கொண்ட இடர் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் மனிதாபிமான சேவைகளை மெச்சிப் பாராட்டிய முதலமைச்சர் விக்னேஸ்வரன், 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இலங்கை அரசு, தனது நாட்டு மக்கள் என்று கூறும் தமிழ் மக்களைக் கொத்துக் குண்டுகளை வீசிக் கொன்றொழித்தமையையும், அப்போது அரசு நடந்து கொண்ட முறைமையையும் அமைச்சர் டிலானுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*“இலங்கை இராணுவம் கொத்துக் குண்டுகளை வீசி சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்து, பல லட்சக்கணக்கான மக்களை நிரந்தர ஊனமுற்றவர்களாக மாற்றி, மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்விடங்களை அழித்து மண்ணோடு மண்ணாக்கியது. அந்தப் பேரழிவு இலங்கை அரசுக்கு எந்தவித மனிதாபிமான உணர்வுகளையும் உண்டு பண்ணவில்லை.*

*“போர் முடிந்த பின்னராவது எஞ்சியுள்ள மக்களுக்கு இலங்கை அரசு எவ்வகையான உதவிகளை வழங்கியது என எடுத்துக் கூறவேண்டும். அல்லது அதுபற்றிய விவரப் பட்டியல் இருந்தால் அவற்றையாவது வெளியிடவேண்டும்.”*

-இப்படிக் கோரியிருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

பாதிக்கப்பட்ட நமது மக்களுக்கு நேரடியாக மலேசிய அரசிடமிருந்து உதவிகள், வசதிகள், நிதிகள் கிடைக்கின்றமைக்கு ஆப்பு வைப்பது போல கருத்து வெளியிட்ட அமைச்சர் டிலானுக்கே இப்படிப் பதிலடி தந்திருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

மலேசியப் பிரதமரிடம் நேரடியாக உதவி கோரிய முதல்வர் விக்னேஸ்வரனின் செயலை நையாண்டி பண்ணி, அந்த உதவிகள் கிடைப்பதற்கு முட்டுக்கட்டை போடுவது போல அமைச்சர் டிலான் வெளியிட்ட கருத்து, முதல்வர் விக்னேஸ்வரனுக்கு மட்டும் எதிரான நடவடிக்கை அல்ல. ஒட்டுமொத்தமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட - அல்லது யுத்தத்தின் மூலம் இலங்கை அரசினால் அழிவுக்கு உள்ளாக்கப்பட்ட - தமிழினத்துக்கு எதிரானது அது.

வெளிநாட்டு உதவிகள் தமிழினத்துக்கு நேரடியாகக் கிடைக்கின்றமையை முட்டுக்கட்டையிட்டு தடுக்கும் நடவடிக்கையை ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் எதிரான செயற்பாடாகவே பார்க்க வேண்டும்.

ஆனால், நமது தமிழ் தலைவர்கள் அனைவரும் இந்த விவகாரம் ஏதோ முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிரான விடயம் போல கருதி, தாங்கள் மௌனம் காக்கின்றார்கள்.

மலேசியப் பிரதமரிடம் நமது முதல்வர் உதவி கோரியமையையும், அதைச் சாதகமாகப் பரிசீலிக்க அவர் முன்வந்தமையையும் கொள்கை ரீதியில் தென்னிலங்கை எதிர்க்கும்போது, கொதித்து எழ வேண்டிய நமது அரசியல் தலைமைகள் வாளாவிருக்கின்றன. அமைதி காக்கின்றன. இத்தகைய விடயங்களைக் கையாள்வதற்காகத்தான் தேசிய மட்டத்தில் அவர்களை மக்கள் தெரிவு செய்து அனுப்பியிருக்கின்றார்கள்.

அந்த விடயத்தைக் கையாளாமல், உள்ளூராட்சி, மாகாண விடயங்களுக்குள் வந்து கையோட்டிக் கொண்டு நிற்கின்றார்கள் அவர்கள்.

போதாக்குறைக்கு, இத்தகைய விடயங்களை வடக்கு முதல்வர் கையாளும்போது, மாகாணத்தை நிர்வகிக்க முடியாமல், அதைப் பார்க்காமல் இந்த விடயங்களில் இவர் ஏன் தலையிடுகின்றார் என்ற விமர்சனம் - கேள்வி - இவ்வாறு தேசிய மட்டத்தில் விடயங்களைக் கையாள வேண்டிய நமது தலைமைகளிடம் இருந்து வருகின்றது.

இறுதி யுத்தத்தின் போது தமிழர் தேசம் மீது தென்னிலங்கைச் சிங்களப் படைகள் தொடுத்தது இனவழிப்புப் போரே என்று முதல்வர் விக்னேஸ்வரன் போல வெளிப்படையாகவும், அப்பட்டமாகவும் கூறும் திராணி இந்தத் தலைவர்களுக்கு இல்லை.

நலிந்து, நசுங்கி நின்று தென்னிலங்கை தந்ததை - தருவதை - பிச்சையாகப் பெற்றுத் தரும் மனநிலையில் இருக்கும் இந்தத் தலைவர்களினால் முதல் விக்னேஸ்வரன் போல தட்டிக் கேட்கவும், சுட்டிக் காட்டவும், முட்டிமோதி பிடுங்க முயலவும் இயலுமா என்பது கேள்வியே.

# இந்தியக் கடற்படைக் கப்பல் ‘சுட்லேஜ்’ நாடு திரும்பியது



கொழும்பு, டிசெ. 23

இலங்கை கடல் நீரளவியல் கணக்கெடுப்பிற்காகக்கொழும்பு துறைமுகத்திற்கு வந்திருந்த இந்தியக் கடற்படையின் ‘சுட்லேஜ்’ கப்பல் வெற்றிகரமாக தனது விஜயத்தை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பியது.

இக்கப்பலைகடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய மரியாதை செலுத்தி அனுப்பி வைத்தனர்.

இந்திய- இலங்கை கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட நீரளவியல் கணக்கெடுப்பின் இரண்டாவ து கட்ட செயற்பாடுகள் டிசெம்பர் 19 ஆம் திகதி நிறைவு பெற்றது.

இந்த அளவீடு, கொழும்பு முதல் காலி வரையிலான கடற்பிராந்திய கடலோரத்தில் இருந்து 200 மீற்றர் ஆழம் வரை விஸ்தரிக்கப்பட்டது.

இதேவேளை, அடுத்த வருடம் கிரேட் பேசஸ் இலிருந்து சங்கமன்கந்த வரை மூன்றாவது கட்ட நீரளவியல் கணக்கெடுப்பை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல்கள் இலங்கையில் நங்கூரமிட்டுள்ள காலத்தில் இலங்கை கடற்படையினருடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

# உள்ளூராட்சி தேர்தல் அமைதியாக நடைபெற பொலிஸார் ஒத்துழைப்பர்



கொழும்பு, டிசெ. 23

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை நீதியாகவும் நேர்மமையாகவும் நடத்த பொலிஸ் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று சட்ட, ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிர்வாகத் துறைசார்ந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் தேர்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

தேர்தலை சிறப்பாக நடத்தும் விதம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் பொலிஸாருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலை இலக்காக வைத்து சமூக ஊடகங்கள் வாயிலாக இனவாத, மதவாதக உணர்வுகளைப் பரப்பும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# கண்ணிவெடி தடை அமைப்பு இலங்கைக்குப் பாராட்டு!



கண்ணிவெடி தடை தொடர்பான அமைப்பு நாடுகளின் மாநாட்டில் இலங்கை வரவேற்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் கண்ணிவெடி எதிர்ப்புக்கான பிரகடனத்தில் இலங்கை 163 ஆவது நாடாகக் கைச்சாத்திட்டது.

இதனை முன்னிட்டு வியட்நாமில் நடைபெற்ற இந்த அமைப்புகளின் மாநாட்டில் இலங்கை இவ்வாறு வரவேற்கப்பட்டது.

கடந்த 18 ஆம் திகதி வியட்நாமில் ஆரம்பமான இந்த மாநாடு நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்த மாநாட்டில் கண்ணிவெடி தடை மற்றும் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான ஒஸ்ரியாவின் அமைச்சரான Thomas Hajnoczi இலங்கையின் நடவடிக்கையை வரவேற்றார். இது முன்னொரு போதும்இல்லாதஇலங்கையின் முன்னேற்றமாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்த அமைப்பின்20ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு இந்த விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை முறைகேடுகள்; விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 23

கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சைகளின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படும் என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் யாவும் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தன. பரீட்சைகள் நிறைவடைந்த தினம், குழப்பங்களைவிளைவிக்கும் வகையில் பரீட்சார்த்திகள் எவராவது செயற்பட்டிருந்தால், அவ்வாறானவர்களின் பெறுபேறுகள்இடைநிறுத்தி வைக்கப்படுமெனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பிலான விசாரணைகளே வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

(ஐ)

## நாளை

24.12.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : சதயம் மு.இ. 8.26 வரை
திதி :ஷஷ்டி மு.இ.9.51 வரை
சுபநேரம் : 9.26 – 10.56 வரை
இராகுகாலம்: 4.56 – 6.26 வரை

# 20 அரசியல் கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ.23

2017 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 20 அரசியல் கட்சிகளும் ஒன்பது சுயேச்சைக் குழுக்களும் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் நடைமுறை நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது.

இரண்டுகட்டங்களாகவேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டன. முதற் கட்டத்தில் 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இரண்டாம் கட்டத்தில் 248 மன்றங்களுக்குமாக 341 உள்ளூராட்சி அமைப்புக்களுக்காக வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன.

மொத்தமாக 20 அரசியல் கட்சிகளும் ஒன்பதுசுயேச்சைக் குழுக்களும் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹமட் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சி ஐந்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரப்பனே பிரதேச சபை, யாழ்ப்பாண மாநகர சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை ஆகியவையும் அடங்கும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெலிகம மற்றும் ரிதிகம பிரதேச சபைகளுக்காக தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மௌபிம மக்கள் கட்சி திக்வெல்ல பிரதேச சபைக்காக தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

தேசிய மக்கள்கட்சி கொழும்பு மாநகர சபைக்கும், கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபைக்கும் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே மாநகர சபைக்காக ஐக்கிய சோசலிசக் கட்சி தாக்கல் செய்த வேட்புமனுவும், எல்பிட்டி, பொல்கஹவெல, பிபில பிரதேச சபைகளுக்காக ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி தாக்கல் செய்த வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

ஜனசெத்த பெரமுன என்ற கட்சி கட்டுநாயக்க, சீதுவ நகர சபைகளுக்காகவும், வெலிகந்த பிரதேச சபைக்காகவும் தாக்கல் செய்த நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மட்டக்களப்பு மாநகர சபைக்கும், துணுக்காய் பிரதேச சபைக்கும் தாக்கல் செய்த வேட்பு மனுக் கள் நிராகரிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா சமசமஜா கட்சி நுவரெலியா பிரதேச சபைக்காகத் தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது. நல்லாட்சிக்கான தேசிய இயக்கம் மஹவ பிரதேச சபைக்காகத் தாக்கல் செய்த வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை, கஸ்பாவ - ஹரிஸ்பத்துவ - வலிகாமம் மேற்கு - வவுனியா வடக்கு பிரதேச சபைகள் ஆகியவற்றுக்காக ஒன்பது சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. உள்ளூராட்சி தேர்தல் வாக்குப் பதிவு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெறும் என்றும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார் (க)

### விடுமுறையை முன்னிட்டு

## நேற்று முதல் விசேட ரயில் சேவை!



கொழும்பு, டிசெ.23

புதுவருடம், நத்தார் காலம் மற்றும் பாடசாலை விடுமுறை என்பவற்றை கருத்தில் கொண்டு நேற்று முதல் ஜனவரி 7 ஆம் திகதி வரை விசேட ரயில்சேவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இந்தப் ரயில் சேவை கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி செயற்படும் என மேலதிக ரயில் மேலாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி இந்த மாதம் 22,24, 26 மற்றும் ஜனவரி 2, 4, 6, ஆகிய தினங்களில் காலை 7.03மணிக்கு கொழும்பிலிருந்து செல்லும் குறித்த ரயில் மாலை 5.39 மணிக்கு பதுளை சென்றடையவுள்ளதுடன் 23, 25, 27,29 மற்றும் ஜனவரி 3,5, 7,ஆகிய தினங்களில் பதுளையிலிருந்து காலை 7.15 மணிக்கு புறப்பட்டு மாலை 6.12 இற்கு கொழும்பை வந்தடையவுள்ளது.

பொதுமக்களின் வேண்டு கோளுக்கிணங்க ரயில் மேலாளர் மஹானாம அபேவிக்ரமவின் அறிவுரைபடி இந்த விசேட ரயில் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## கறுப்பு நிறமானது கெசல்கமுவஓயா!



கொழும்பு, டிசெ.23

காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந் தலாவ, கெசல் கமுவ ஓயாவின் நீர் கறுப்பு நிறமாக மாறியமை தொடர்பில் பொகவந்தலாவபொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று விடியற் காலையில் கெசல் கமுவ ஓயா ஆற்று நீர் கறுப்பு நிறத்தில் செல்வதை அவதானித்த பிரதேசமக்கள் பொகவந்தலாவ பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமை தொடர்பில் இந்த கெல்கமுவஓயா ஆற்றின் நீரில் என்ன கலக்கப்பட்டது என்பதைக் கண்டறிவதற்குப் பொகவந்தலாவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தேயிலை தொழிற்சாலையில் உள்ள கழிவு நீரை கெசல்கமுவ ஓயா ஆற்றில் கலக்கபட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.இதன் காரனமாக பொகவந்தலாவ பகுதியில் உள்ள தேயிலை தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களைப் பொலிஸார் சோதனை செய்து வருகின்றனர், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(க)

## யாழில் வேட்புமனுக்கள் நிராகரிப்பு: நீதிமன்றை நாடுகிறது மஹிந்த அணி!

கொழும்பு, டிசெ. 23

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்காக நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றத்தைத் நாடவுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி .

யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் நெடுந்தீவு, வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேச சபைகளில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஐந்து வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற் கொள்ள உள்ளதாக அதன் செயலாளரான சட்டத்தரணி சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

(க)



# திருகோணமலையில் 66 வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன!



திருகோணமலை,டிசெ.23
திருகோணமலையில் 2ஆம் கட்ட வேட்புமனு நியமனத்தில் தாக்கல் செய்யப்பட்ட 66 வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2ஆம் கட்டமாகத் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா நகரசபை, திருகோணமலை நகரசபை, மொறவெவ பிரதேசசபை, குச்சவெளி பிரதேசசபை, கந்தளாய் பிரதேசசபை, மூதூர் பிரதேசசபை ஆகிய 06 உள்ளூராட்சி சபைகளுக்கு கடந்த 18 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி மதியம் 12 மணிவரை வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தன.

வேட்புமனுக்கள் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதன்போது அங்கீகரிக்கப்பட்ட 61 அரசியல் கட்சிகள் மற்றும் 7 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியிருந்தன.

அவற்றுள் 59 அரசியல் கட்சிகள் மற்றும் 07 சுயேச்சை குழுக்கள் உட்பட மொத்தமாக 66 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டுப்பணம் செலுத்திய 2 கட்சிகள் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

அத்துடன், கந்தளாய் பிரதேச சபைக்கு வேட்புமனு தாக்கல் செய்த சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஒரு வேட்பாளரும், கிண்ணியா நகரசபைக்கு வேட்புமனு தாக்கல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஒரு வேட்பாளரும், கந்தளாய் பிரதேசசபைக்கு வேட்புமனு தாக்கல் செய்த சுயேச்சை குழுவைச் சேர்ந்த ஒரு வேட்பாளரின் பெயரும் நிராகரிக்கப்பட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 9 கட்சிகள், 6 சுயேச்சைக் குழுக்கள் கல்முனையில் வேட்புமனு சமர்ப்பிப்பு!

மட்டக்களப்பு,டிசெ.23
கல்முனை மாநகரசபை தேர்தலில் போட்டியிடுவதற்காக 9 கட்சிகளும், 6 சுயேச்சை குழுக்களும் வேட்பு மனுக்களை சமர்பித்துள்ளன.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இந்த வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் சுயேச்சை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த அலுவலகத்துக்கு வருகை தந்திருந்தனர்.











## ஐ.தே.கவுக்கு எதிராக நீதிமன்றம் செல்கிறார் அமைச்சர் டிலான் பெரேரா!

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சி ஹாலி-எல பிரதேச சபைக்குத் தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் இணைக்கப்பட்டிருந்த சத்திய கடிதங்கள் சட்ட விரோதமானவை என்பதால் அதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்லப் போகிறேன் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஹாலி-எலவில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் 43 வேட்பாளர்களின் வேட்பு மனுக்களில் இணைக்கப்பட்டிருந்த சத்தியக் கடிதங்களில் முத்திரை ஒட்டப்படவில்லை. பதுளை மாவட்ட செயலகத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனால், வேட்பு மனுக்களின் செல்லுபடிதன்மை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் போகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கனடாவில் கொல்லப்பட்ட இலங்கைப் பெண்ணின் பிள்ளைகளுக்கு உதவி கோருகின்றார் அவரது சகோதரி

கொழும்பு,டிசெ.23
கனடாவில் கொடூரமாக அடித்து கொல்லப்பட்ட இலங்கை யாழ். அளவெட்டி செட்டிச்சோலை வடக்கை சேர்ந்த பெண்ணின் பிள்ளைகளுக்கு உதவி கோரப்பட்டுள்ளது என அந்நாட்டு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் கனடாவில் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்ட ஜெயந்தி சீவரத்னம் என்ற பெண்ணின் சகோதரி சுமி சீவரத்னம் உயிரிழந்த தனது சகோதரியின் பிள்ளைகளுக்கு உதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள கோரிக்கையில்:-

பல்கலைக்கழகத்தில் தாதியாக முதலாம் ஆண்டில் கற்கும் மகள் சோபியா மற்றும் 11 ஆம் வகுப்பில் கற்கும் மகன் லகீவனையும் தவிக்க விட்டு இந்த உலகை விட்டு சென்றுள்ளார் எனது சகோதரி ஜெயந்தி.

இந்த பிள்ளைகளின் கற்கை மற்றும் எதிர்காலம் என்பவற்றுக்காக உதவி கோருகின்றேன் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் கனேடிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் அனர்த்த முன்னேற்பாடு சம்பந்தமான கலந்துரையாடல்!



மட்டக்களப்பு, டிசெ. 23
எதிர்வரும் காலத்தில் கால நிலை மாற்றத்தால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் அனர்த்த முன்னேற்பாடு சம்பந்தமான கலந்துரையாடல் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

உதவி பிரதேச செயலாளர் சத்தியகௌரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.சீ.எம்.றியால் முகமட், ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கு.சுகுணன், பிரதேச சபை, கடலோர பாதுகாப்பு போன்ற திணைக்களங்களை சார்ந்த உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், இலங்கை மின்சார சபை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், விசேட அதிரடி படையினர், பொலிஸார், கடற்படையினர் என பலதரப்பட்ட திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் காலங்களில் வடகீழ் பருவப் பேச்சி மழையினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக அனர்த்த முன்னேற்பாடுகளை மேற் கொள்வது சம்பந்தமாகப் பல்வேறு திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது அனைத்துத் திணைக்களங்களுக்கும் அனர்த்தம் ஒன்று ஏற்பாட்டால் செயற்படவேண்டிய விதம் சம்பந்தமாகவும், திணைக்களம் சார்பில் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் சம்பந்தமாகவும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டதுடன் அவர்கள் அவ்வாறு செயற்படுவதற்குத் தடையாய் இருக்கும் காரணிகள் சம்பந்தமாகவும் கலந்து கொண்ட திணைக்களம் சார் உத்தியோகத்தர்களிடம் கேட்டறிந்து கொள்ளப்பட்டது.

# நடப்புத் தேர்தல் முறைமை சிறு கட்சிகளுக்கு ஆபத்து!

## முன்னிலை சோசலிச கட்சி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 23

நடப்பு தேர்தல் முறைமை சிறு கட்சிகளுக்கு பெரும் ஆபத்தினை ஏற்படுத்தியுள்ளது என முன்னிலை சோசலிச கட்சி தெரிவித்துள்ளது.

இந்த தேர்தல் முறைமை சிறு கட்சிகளுக்கு பொருந்தக் கூடியதல்ல எனவும், ஆளணி பலம் குறைவாக காணப்படுவதனால் தேர்தலில் இம்முறை தமது கட்சி போட்டியிடவில்லை எனவும், முன்னிலை சோசலிச கட்சியின் பிரச்சார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜே.வி.பி கட்சியும் இன்று தனது வேட்பாளர் பட்டியலில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

போதியளவு ஆட்கள் இல்லாத காரணத்தினால் இந்த தேர்தலில் நாம் போட் டியிடவில்லை.

நாடு முழுவதும் சென்று இந்த தேர்தல் முறைமையின் தவறுகள் குறைபாடுகள் குறித்து தெளிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம்.

சிறு கட்சிகளை அழித்து பெரிய கட்சிகள் எதிர்வரும் 2020ம் ஆண்டில் வெற்றியீட்ட முயற்சித்து வருகின்றன என துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

## ஒருமித்த முற்போக்கு முன்னணி 14 சபைகளில் ஏணி சின்னத்தில் தனித்துப் போட்டி!

கொழும்பு, டிசெ. 23

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஒருமித்த முற்போக்கு கூட்டணி என்ற பெயரில் ஏணி சின்னத்தில் தனித்து மாவட்ட வாரியாக பதினான்கு சபைகளில் போட்டியிடுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசபையிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச சபையிலும் இம்புல்பே பிரதேசசபையிலும் கொடக்கவெல பிரதேச சபையிலும் போட்டியிடுகின்றது.

இதேவேளை, மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை மாநகரசபையிலும் மாத்தளை பிரதேச சபையிலும் இறத்தோட்டை பிரதேச சபையிலும் போட்டியிடுகின்றது.

கண்டி மாவட்டத்தில் கண்டி மாநகரசபையிலும் நாவலப்பிட்டி நகரசபையிலும் கம்பளை நகரசபையிலும் பன்வில பிரதேச சபையிலும் உடபலாத்த பிரதேசசபையிலும் குண்டசாலை பிரதேச சபையிலும் மெதும்பர பிரதேச சபையிலும் போட்டி யிடவுள்ளது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

(க)

# புதிய ஊடகப் பணிப்பாளர், இராணுவ பேச்சாளராக பதவியேற்றார் பிரிகேடியர் சுமித் அத்தபத்து!



புதிய ஊடக பணிப்பாளர் மற்றும் இராணுவ பேச்சாளராக இராணுவ பொறிமுறை காலாட் படையணியின் சிரேஷ்ட அதிகாரியான பிரிகேடியர் சுமித் அத்தபத்து பதவியேற்றுள்ளார்.

கொழும்பு 4 இல் அமைந்துள்ள அவரது பணிமனையில் தனது கடமைகளை நேற்று முன்தினம் அவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி இலங்கை இராணுவ நித்திய படையணியில் இணைந்து 32 வருடங்களைப் பூர்த்தி செய்த பிரிகேடியர் சுமித் அத்தபத்து, இராணுவ சிங்க படையணி மற்றும் பொறிமுறை காலாட் படையணியில் பதவிநிலை கடமைகளையும் வகித்துள்ளார்.

ஊடகப்பணிப்பாளர் இதற்கு முன்பு இந்த பணிப்பகத்தில் மேஜர் தர பதவியில் கடமை வகித்த அதிகாரியாவார்.

1987 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி இராணுவ அதிகாரி பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார். பிரிகேடியர் சுமித் அத்தபத்து இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்பு 58 ஆவது படைப் பிரிவின் படைத் தளபதியாக காலி பூசா பிர தேசத்தில் கடமை வகித்தார்.

மேலும், பொறிமுறை காலாற் படையணியின் படைத்தளபதியாகவும், மின்னேரியாவில் அமைந்துள்ள காலாட் பயிற்சி மத்திய நிலையத்தின் கட்டளை அதிகாரியாகவும் அவர் கடமை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பணிப்பாளர் ஜெனரல் மற்றும் ஊடக பணிப்பாளராகக் கடமை வகித்த மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன 51 ஆவது படைப் பிரிவின் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும பொதுஜன முன்னணிக்குத் தாவவில்லையாம்



கொழும்பு, டிசெ. 23

கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெருமவை இலக்கு வைத்து பேஸ்புக் ஊடாக போலி பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

'ஸ்ரீ லங்க பிரிட்ஜ்' என்ற பெயரில் பேஸ்புக் பக்கத்தில் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும பொதுஜன முன்னணிக் கட்சிக்குத் தாவினார் என்ற செய்தி நேற்றுமுன்தினம் பரப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும கருத்துத் தெரிவிக்கையில்-

களுத்துறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி தொடர்பில் வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு அங்கிருந்து நேரடியாகக் களுத்துறை விஹாரைக்குச் சென்றிருந்தேன். அங்கு ரோஹித அபேகுணவர்தன உள்ளிட்ட எதிரணி உறுப்பினர்களை எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேரிட்டது.

இதன்போது பிடிக்கப்பட்ட புகைப்படங்களை எடுத்துக் கொண்டு சிலர் போலிப்பிரசாரங்களை பேஸ்புக் வாயிலாக முன்னெடுத்து வருகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள் என்று நான் ஒருபோதும் சிந்திக்கவில்லை.

எதிரணி உறுப்பினர்களை மனிதாபிமான நோக்கத்திலேயே சந்தித்துப் பேசினேன். அதனால் கட்சிதாவும் எண்ணமும் எனக்கு ஒருபோதும் வரவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# இராஜகிரிய மேம்பாலத்தின் நிர்மாணப் பணிகளை பார்வையிட்டார் பிரதமர்!





கொழும்பு, டிசெ.23

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது அவசியம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இறுதிக்கட்ட நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வரும் இராஜகிரிய மேம்பாலத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பிலான மேற்பார்வைக்காக நேற்றுமுன்தினம் சென்றபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கென 470 கோடி ரூபா செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இராஜகிரிய மேம்பால நிர்மாணப் பணிகள் கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தேசிய கொள்கைகள் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவும் கலந்து கொண்டார்.

(க)

# 31,000 இலங்கையருக்கு இரட்டைக் குடியுரிமை

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் எனக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை 31ஆயிரம் இலங்கையர்களுக்கு இரட்டைக்குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது எனக் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டு ஜெனரல் எம்.நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்காக ஒருவர் 3 லட்சம் ரூபாய் பணமும், அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்குத் தலா 50ஆயிரம் ரூபாய் பணமும் செலுத்த வேண்டும். இரட்டைக் குடியுரிமைபெற்றுக்கொள்ளும் விண்ணப்பங்கள் பெரிய அளவில்திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பங்களைப் பரிசோதித்துப் பொருத்தமான வர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்குக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது எனவும் ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## ராஜகிரியவில் வீடமைப்பு திட்டம்!

கொழும்பு, டிசெ. 23 ராஜகிரிய வேலுப்பிள்ளை - வத்தை என்ற இடத்தில் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் 177 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அரச, தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலன் கருதி வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

## திருவாசகப் பெருவிழா

வடமராட்சி,டிசெ.23 சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடாந்த திரவாசகப் பெருவிழாநாளைஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பெருவிழாவைத் தொடர்ந்து நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரப் தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகளின் ஆசி யுரையும் அதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. என்றும் இந் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## தினசரி ராசி பலன் 23.12.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித்திங்கள் 8ஆம் நாள் சனிக்கிழமை பஞ்சமித்திதி இரவு 12.25மணி வரை பின்னர் ஷஷ்டி நட்சத்திரம்.அவிட்டம் இரவு 9.43மணிவரை பின்னர் சதயம். சித்தாமிர்த யோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 10.43 மணிமுதல் 12.09 மணி வரை
**சுபநேரம்** - மாலை 06.29 மணி முதல் 07.59 மணி வரை
**திவசம்செய்யவேண்டியதிதி**- மார்கழி மாதவளர்பிறைபஞ்சமி
**பிறந்த நட்சத்திர வழிபாடு:** அவிட்டம்

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவு சுமாராக இருக்கும். தொழில் வளர்ச்சி பாதிப்படைந்து வருமான வாய்ப்பு குறையும். மாணவர்கள் உடல்நலனைப் பராமரிப்பது அவசியம்.

**ரிஷபம்:** இன்பமான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆடை,ஆபரணச்சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் வரவேண்டிய பணத்தை வசூல் செய்வார்கள்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். சுயதொழிலில் உயர்வு உண்டாகும். எடுக்கும் முயற்சி பயனுள்ளதாக அமையும். மாணவர்களின் கல்வித் திறமை பளிச்சிடும்.

**கடகம்:** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பப்பிரச்சினைகள் கவலை தரும். வீட்டுப் பொருள்கள் களவு போனமையால் கவலையைத் உண்டாகும். உறவினர்களின் தொல்லைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** யோகமான நாள். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். குடும்பஒற்றுமை பலப்படும். சகோதர வழியால் எதிர்பாராதநன்மைகள் கிடைக்கும். சொந்த வீட்டிற்கு குடிபோகும் யோகம் உண்டாகும்.

**கன்னி:** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்ச்சி அடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். உத்தியோகத்தில் கௌரவ பதவி தேடி வரும்.சகோதர உறவு வலுவடையும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரித்து சுபீட்சம் உண்டாகும். பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**விருச்சிகம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். தனியார் துறையில் அதிக நேரம் வேலை செய்ய வேண்டி வரும். வீண் அலைச்சல்களால் உடலும்,மனமும் சோர்வடையும்.

**தனுசு:** ஆக்கபூர்வமான நாள். பொருள்வளம், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நினைக்கும் காரியம் இனிதே நிறைவேறும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம்:** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்ப உறவில் பாசம்,நெருக்கம் அதிகரிக்கும். சிலருக்கு சொந்த வீடு வாங்கும் யோகம் உண்டாகும். திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**கும்பம்:** கவலையான நாள். பணவரவு குறையும் குடும்ப ஒற்றுமை சீர்குலையும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். வியாபாரத்தில் நம்பியவர்கள் மோசம் செய்வார்கள்.

**மீனம்:** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். வெளிநாட்டுஉறவுகளிலிருந்து ஆடம்பரப் பொருள்கள் பரிசாக வந்து சேரும்.

சந்திராட்டமநாள்: மிருகசீரிடம்3ஆம்,4ஆம் பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம், 1 ஆம்,2 ஆம்,3 ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

## விருது வழங்கும் நிகழ்வு




முல்லைத்தீவு,டிசெ.23 முல்லைத்தீவு மாவட்டத்தின் பரண்டீனா நிறுனத்தின் இளையோர் திறன் விருத்திச் செயற்றிட்டம் ஊடாகப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாவி சிவன்கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. மாணவர்களுக்கான ஆளுமையை விருத்தி செய்யும் கணினி அறிவு, ஆங்கில அறிவு மற்றும் தலைமைத்துவம் உள்ளிட்ட இளையோர் திறன் விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் 52 பேருக்குக் கடந்த மூன்றுமாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி வகுப்புக்களின் நிறைவில் விருது வழங்கும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.இந்த நிகழ்வில் துணுக்காய் உதவிப் பிரதேச செயலர் இ.பிரதாபன் மதகுருமார்கள் மற்றும் 'பரண்டீனா' நிறுவனப் பொது முகாமையாளர் ஸ்கேமந்த மாவட்ட முகாமையாளர் மல்லாவி கணினித் தொழில்நுட்ப நிறுவன அமைப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.முல்லைத்தீவு மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புக்கள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள் இவர்களுக்கான தொழில் கற்கைநெறிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்பாட்டில் பரண்டீனா நிறுவனம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-81)

## கொழும்பு துறைமுக நகரத்தில் அமையவுள்ள சர்வதேச அதிசயம்!

கொழும்பு,டிசெ.23 கொழும்புத் துறைமுக நக ரத்தில் கொழும்பு சர்வதேச நிதி நகரத்துக்கான கட்டடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த சர்வதேச நிதி நகரத்துக்கான கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான முதலீடு 100 கோடி அமெரிக்க டொலராகும் என்று தெரிவிக்கப்படுகிறது. நேரடி வெளிநாட்டு முதலீடாக இந்த நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான வகையில், சீனத்துறைமுக பொறியியலாளர் கூட்டுத்தாபனம், பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் வரையறுக்கப்பட்ட C.H.E.C கொழும்புத் துறைமுக நகரத் தனியார் நிறுவனம் ஆகியவற்றுக்குஇடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்கரணவக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாள்கள் அஞ்சலி நிகழ்வுகள்


கொக்குவில் டிசெ.3 மறைந்த எம்.ஜி.ஆர் இன் 30ஆம் ஆண்டு நினைவு நாள் ஜெ.ஜெயலலிதாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி, பொன்மதிமுகராஜா வின் 19 ஆம் ஆண்டு நினைவு நாள். ஆழிப்பேரலையின் 13 ஆம் ஆண்டு நினைவு நாள் என்பவற்றை முன்னிட்டு மூன்று நாள் நிகழ்வுகளாக அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துலக எம்.ஜி.ஆர்பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில், முதல்நாள் நிகழ்வாக நாளை ஞாயிற்றுக் கிழமை மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வுகளும், இரண்டாம் நாள் நிகழ்வான 25 ஆம் திகதி அஞ்சலி உரைகளும் ,இறுதி நாள் 26ஆம்திகதி செவ்வாய்க்கிழமை கொக்கு வில் கிருபாகர சிவசுப்பிரா மணிய கோவிலில் சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், அன்னதானமும் இடம்பெறும்.

## மருத்துவ முகாம்

சாவகச்சேரி மிருசிவில் உசன் ராமநாதன் வித்தியாலயத்தில் யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைத் தளபதியின் ஏற் பாட்டில் இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7மணிக்கு இடம் பெறும். மருத்துவ முகாமில் பல்,கண், காது, மூக்கு, தொண்டை மற்றும் குழந்தை பெண்ணியல், அறுவைச் சிகிச்சை ஆகியவற்றுக்கான மருத்துவ நிபுணர்களால்பரிசோதனை மேற்கொள்ளப் படும். அத்துடன் நீரிழிவுப் பரிசோதனை ஈசிஜி பரிசோதனைகளும் நடைபெறும். கண் பரிசோதனையின் பின்னர் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

பொதுமக்களின் போக்குவரத்து சேவை வல்வெட்டித்துறை சிதம்பர வித்தியாலயம், நிலாவரைக் கிணற்றடி, அச்சுவேலி யூனியன் முகாமுக்கு முன்புள்ள மைதானம் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 44

### இராமேஸ்வரக் கம்பன் விழாப் பயணம் 07.08.1982

*பேராசிரியர் சண்முகதாஸுடனான முரண்பாடு*

அக்காலத்தில், ‘மாற்றம்’ என்ற சஞ்சிகை யாழில் வெளிவந்தது. அச்சஞ்சிகையின் தொடர்ச்சியாக, வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் எழுதி வந்தேன். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பற்றி, கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, ‘‘பாவம் தமிழ்’’ எனப் பதிலளித்தேன். அப்பதில் சமூகத்தில் பெரிதாய்ப் பேசப்பட்டது. அப்பதில் கண்டு, தமிழ்த்துறை என்னோடு கடுமையாய் முரண்பட்டது. தொடர்ந்து அடுத்த வாரத்தில் மற்றொரு வாசகர், ‘‘உங்களோடு நெருங்கியிருக்கும் பேராசிரியர். சண்முகதாஸைப் பற்றி, என்ன சொல்லப் போகிறீர்கள்?’’ என்று மீண்டும் கேள்வி கேட்க, ‘பாவம் தமிழ் மட்டுமல்ல, சண்முகதாஸும்தான்’ எனப் பதிலளித்தேன். பல்கலைக் கழகத்தோடு எனக்கேற்பட்ட இம்முரண்பாட்டில், பேராசிரியர் சற்றுத் தூரப் போனாலும், எங்கள்மேல் அவர் கொண்டிருந்த அன்பு குறையவில்லை. கழகம் இக்குடும்பத்திற்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

★ ★ ★


*சுப்பிரமணிய ஐயர்*

இவர் யாழ்பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் இருந்தார். விரிவுரையாளர் ஆவதற்கு முன்பு யாழ். இந்துக் கல்லூரியில் சிலகாலம் கற்பித்தார். அப்போது இவரிடம் பட்டிமண்டபங்களில் பேச அவரிடம் ‘பொயின்ஸ்’ கேட்பேன். கம்பன் கழகம் ஆரம்பித்த நாள் தொடக்கம் எங்களுக்குப் பெரும் துணையாக இருந்து வந்தார். வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர் இவர். ஆரம்ப காலத்தில் மிக வெகுளியாக எல்லோரிடமும் அன்பாய்ப் பழகுவார். கண்டால் கட்டிப் பிடித்து உரிமை பாராட்டுவார். தான் அந்தணர் என்று பார்க்காமல் எங்களோடு சேர்ந்து உண்பார். பிற்காலத்தில் மெல்லமெல்ல மாறத் தொடங்கினார். பட்டிமண்டபங்களில் சுவைபடப் பேசிவந்த இவர், பின்னர் பட்டிமண்டபங்களில் பேச மறுத்தார். பண்டிதர் உமா மகேஸ்வரன், சோ.ப. ஆகியோரோடு சேர்ந்து, மெல்ல மெல்ல கழக முயற்சிகளில் இருந்து விடுபடத் தொடங்கினார். ஒருநாள் பல்கலைக் கழகம் சென்று இவரோடு அது பற்றிக் கடுமையாய் வாதிட்டேன். அதன் பிறகு எங்கள் உறவில் திரை விழத் தொடங்கியது. எளிய மனிதராக இருந்த இவர். பின்னர் தன்னைக் கடுமையான மனிதராய் செயற்கையாய் மாற்றிக் கொண்டார். என்னால் அதனை ரசிக்க முடியவில்லை. அவர் தொடர்பு அப்படியே மழுங்கிப் போயிற்று.

★ ★ ★

*கம்பன் கோட்டத்தில் நிகழ்ந்த விமானத் தாக்குதல்*

1987 இல் யாழ்ப்பாணத்தில், இலங்கை இராணுவத்தின் தாக்குதல் அதிகமாகியிருந்தது. அத்துலத்முதலி அமைச்சராக இருந்த காலம் அது என்று நினைக்கிறேன். பீப்பாய்க்குண்டு என்ற



ஒன்று, யாழ்ப்பாணத்தில் போடப்பட்டுக் கொண்டிருந்தது. குண்டுவீச்சு விமானம் அல்லாத, பெரிய விமானத்திலிருந்து அப்பீப்பாய்க்குண்டு உருட்டப்படும். அப்போது நாங்கள் வைமன் றோட்டில் இருந்தோம். விமானம் வந்ததும் நாம் அமைத்து வைத்திருந்த, ‘பங்கருக்குள்’ ஓடிப் போய் இறங்கி விடுவோம். போகும்போது கையில் ‘றேடியோவையும்’ எடுத்துச் செல்வோம். ‘பங்கருக்குள்’ இருந்தபடி ‘றேடியோவைப்’ போட்டால், குண்டுவீச்சு விமானத்தில் இருப்பவர்கள் பேசுவது எமக்குக் கேட்கும். சிங்களத்தில் சொல்லப்படும், ‘‘இன்ன இடத்தில் குண்டைப் போடு!’’ என்பதான, உத்தரவுகள் காதில் விழகுலை நடுங்கிப்போவோம். அமைச்சரே விமானத்தில் இருந்து பேசுவதாக அக்காலத்தில் சொல்வார்கள். அரைகுறையாய் முடிக்கப்பட்டிருந்த கம்பன் கோட்டத்தின் ஓர் அறையில், குமாரதாசனின் கடைசித் தம்பி கண்ணதாசனும் அவனது சில நண்பர்களும் தங்கிப் படித்து வந்தனர். ஒரு நாள் மாலை விமானத் தாக்குதல் நிகழ்ந்தது. அன்றுதான் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலும் தாக்கப்பட்டது. தாக்குதல் நேரத்தில் ‘பங்க ருக்குள்’ இருந்துவிட்டு, மைம்மல் பொழுதானதும் நானும் குமாரதாசனும், கம்பன் கோட்டத்தைச் சும்மா பார்த்து வரலாம் எனச்சென்றோம். கதவைத் திறந்தால், உள்ளேபுகையும் இடிபாடுகளும் நிறைந்திருந்தன. கோட்டமும் விமானத் தாக்குதலுக்கு ஆளானது. அப்போதுதான் எங்களுக்குத் தெரிய வந்தது. எமக்குக் கை, கால் எல்லாம் நடுங்கத் தொடங்கிவிட்டன. கட்டட ‘பிளாட்டை’ உடைத்து உள் கதவையும் உடைத்து, ஒரு ‘ரொக்கற் லோஞ்சர்’ அறையினுள் உட்சென்றிருந்தது. தங்கியிருந்து படித்த மாணவர்கள், அந்நேரம் அங்கில்லாத படியால் தப்பினார்கள். நாங்களும் தான். பின்னர் கஷ்டப்பட்டு அப்பகுதியைத் திருத்தினோம்.

★ ★ ★

*போராளி பரதனுடன் முரண்பட்டேன்*

அக்காலத்தில் புலிகள் இயக்கத்தின் சார்பாக, ‘நிதர்சனம்’ எனும் தொலைக் காட்சி இயக்கப்பட்டது. அதற்குப் பொறுப்பாளராக பரதன் என்பவர் இருந்தார். ஆற்றலாளர், ஆனால் முன்கோபி அக்காலத்தில் யாழ்.பல்கலைக் கழகத்து மாணவர்கள், தங்களுக்குள் கொண்டாடிய ஓர் ஆண்டு விழாவில், இளைஞர்களுக்கே உரிய குழப்படிகள் செய்ததையும், அவர்களுடைய மதிய விருந்தில் மிச்சமாகக் கொட்டப்பட்ட உணவுகளை, நாய்கள் தின்பதையும் வீடியோ எடுத்து , அகதிகள் உணவுக்கு கஷ்டப்படுவதையும் இதையும் இணைத்துக்காட்டி, ‘‘இதில் யார் நாய்கள்?’’ எனக் கடுமையான விமர்சனத்துடன், அந்நிகழ்ச்சியை பரதன் முடித்திருந்தார். அம்முடிவை என்னால் ஏற்க முடியவில்லை. இச்சம்பவம் நடந்த சில நாட்களின் முன்னர் தான், ஊர்விட்டு ஊர்வந்த அகதிகளுக்கு பல்கலைக் கழக மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து, கொட்டில்கள் போட்டுக் கொடுத்ததை, பத்திரிகையில் படித்தேன். இளைஞர்களிடம் இவ்விரு இயல்பும் இருப்பது இயற்கை தான், என்பது என் எண்ணம். அவர்களது ஒரு நாள் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தை வைத்து, அவர்களை நாய் என்று இழிவு செய்வதை என்னால் ஏற்கமுடியவில்லை. அது நடந்து ஓரிரு மாதத்தின் பின்னர், நிதர்சனத்தின் ஓர் ஆண்டு விழா ஒன்றை பரதன் நடத்தினார். வைமன் றோட்டின் எல்லையில் இருந்த நாவலர் மணிமண்டபத்தில், அந் நிகழ்ச்சி நடைபெற்றது. யாழில் அப்போது இருந்த அறிவியலாளர்கள், அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். அவ்வாண்டு ஒளிபரப்பாகிய நிகழ்ச்சிகள் முழுவதும் காட்டப்பட்டு, வந்தவர்களிடம் அது பற்றி அபிப்பிராயம் கேட்கப்பட்டது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் எல்லாம் மௌனமாயிருக்க, நான் மட்டும் எழுந்து மாணவர் களை, ‘‘தனித்த ஒரு சம்பவத்தை வைத்து நாய்கள் என்று சொல்வது பொருத்தமில்லை.அவர்கள் நன்மையும் செய்கிறார்கள்’’ என்றேன். ‘‘இன்று கூட எங்களுக்கு மதிய உணவு தந்தீர்கள். அங்கு சென்று பாருங்கள். அங்கும் உணவுகள் கொட்டப்பட்டு நாய்கள் தின்கின்றன.இதையும்தேசப்பற்றின்மை என்று சொல்லலாமா? இது எங்கும் நடக்கும் ஒரு விஷயம் தான். இதைப் பெரிதுபடுத்துவது நல்லதல்ல’’ என் றேன். எனக்கும் பரதனுக்குமான சிறு முரண்பாட்டுடன் கூட்டம் முடிந்தது. அன்றிரவு வைமன் றோட்டில் நான் தங்கியிருந்த வீட்டிற்குப் பரதன், புதுவையை மோட்டார் சைக்கிளின் பின்னால் ஏற்றிக்கொண்டு வந்தார். வெளியில் வந்த என்னிடம், ‘உங்கள் பேச்சு நன்றாக இருந்தது’. என்றார். அவரது முகபாவத்தை வைத்து, அவர் கிண்டலாய்ப் பேசுகின்றார் என்று தெரிந்து கொண்டேன். இருவருக்கும் வாக்குவாதம் விளைந்தது. கருத்துக் கேட்டுவிட்டு, உங்களைச் சந்தோஷப்படுத்த நாங்கள் பேசவேண்டும் என்று, எதிர்பார்க்காதீர்கள் என, அவரிடம் கடுமையாய்ச் சொன்னேன். புதுவை ஓர் ஓரமாய்த் தள்ளி நின்றார். நான் பணியாததைக் கண்ட பரதன், மோட்டார் சைக்கிளை உறுமச்செய்து வேகமாய் வெளியேறினார். அப்போது இயக்கம் எங்களோடு முரண்பட்டிருக்கவில்லை.

★ ★ ★

(தொடரும்...)




தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

உண்மையான புரட்சிகள் நியூயோர்க் ரைம்ஸால் தொடக்கப்படுவதாய் இருக்காது; ஜனநாயகக் கட்சியால் ஆதரிக்கப்படுவதாய் இருக்காது; ரைம் இதழால் மரியாதையளிக்கப்படுவதாய் இருக்காது. அதேபோல அடிப்படை ஜனநாயக உரிமைகளை ஒடுக்குவதை அவை நியாயப்படுத்




தவும் செய்யாது.

பல தசாப்த கால அடையாள அரசியல் சமூக சிந்தனையை நோக்கு நிலை பிறழச் செய்திருக்கிறது ஊழலடையச் செய்திருக்கிறது. சமூகத்தை வர்க்கத்தின் அடிப்படையில் அறிவியல் ரீதியாக மதிப்பீடு செய்வதானது பாலினம் மற்றும் நிறம் ஆகிய ஏமாற்றுகளைக் கொண்டு இடம்பெயர்த்தப்பட்டதானது சமூக நனவைக் கீழிறக்கியிருக்கிறது. குறிப்பாக ‘படித்த’ உயர்-நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் நிகழ்வுகளை வரலாற்று-அறிவுடனான அரசியல் உள்ளடக்கத்தில் வைத்துப் பார்ப்பதற்கான திறனின்




மையும் -விருப்பமின்மையும் கூட- இருக்கிறது. ‘Mee Too’ பிரசாரமானது ஜனநாயகக் கட்சியின் அடையாள அரசியல் மூலோபாயத்தில் பொதிந்ததாய் இருக்கிறது என்ற கிட்டத்தட்ட பட்டவர்த்தனமான ஓர் அம்சம் ஏனோ கவனிக்கப்படாமலிருக்கிறது. ‘பொய்ச் செய்தி’ பிரசாரம், ரஷ்ய- விரோத வெறிக்கூச்சல் மற்றும் இணையத் தணிக்கைக்கான அழைப்புகள் ஆகியவற்றுடனான தொடர்பு தவறவிடப்படுகிறது. ஜோடிக்கப்பட்ட வன்புணர்வு குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்துகின்ற ஒரு பொறி அமைப்புக்குப் பலியான ஜூலியன் அசாஞ்சின் கதி கிட்டத்தட்ட மறக்கப்பட்டிருக்கிறது.

வன்புணர்வு குறித்த போலியான குற்றச்சாட்டுகளுக்குப் பல உதாரணங்கள் இருந்தும் கூட, குற்றஞ் சாட்டப்படும் பெண் எப்போதும் நம்பப்பட வேண்டும் என்பதான அபத்தமான கூற்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் மேல், கால் நூற்றாண்டு காலப் போர், ஜனநாயக உரிமைகள் மீது விரிவடைந்து செல்லும் தாக்குதல் மற்றும் சமூக சமத்துவமின்மையின் மலைப்பூட்டும் மட்டங்கள் ஆகியவற்றின் விரிந்த உள்ளடக்கத்திற்கு வெளியில் வைத்து இந்தப் பிரசாரம் பார்க்கப்படும்போது குழப்பமே அதிகரிக்கிறது.

பாலியல் துன்புறுத்தலின் உண்மையான நிகழ்வுகள் மற்றும் மனித-விரோத கொடூரம் மற்றும் சுரண்டலின் அத்தனை வடிவங்களுக்குமான எதிர்ப்பு என்பது, முதலாளித்துவத்திற்கு எதிராய் தொழிலாள வர்க்கத்தின் அணிதிரட்டலை அவசியமாக்குகின்ற ஒரு வர்க்கப் பிரச்சினை ஆகும்.

‘Mee Too’ அல்ல ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்’ என்பதே மனித முன்னேற்றத்திற்கான போராட்டத்திற்கு உயிர்கொடுக்கின்ற இலட்சிய வாசகம் ஆகும்.





## ட்ரம்பும் ஜெருசலேமும்


அமெரிக்கா ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்கிறது மற்றும் அங்கே வொஷிங்டன் அதன் தூதரகத்தை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது என்று அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆணவமான ஆத்திரமூட்டும் உரை, இஸ்ரேலிய துருப்புக்களால் சுட்டுத்தள்ளும் ஆயுதங்கள், இரப்பர் தோட்டாக்கள் மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகளைப் பயன்படுத்தி அந்த ஆக்கிரமிப்புப் பகுதி எங்கிலும் எழுந்த போராட்டங்களை நசுக்குவதில் 100 இற்கும் அதிகமான பாலஸ்தீன தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் காயப்படுத்தப்பட்ட வடிவத்தில் அண்மையில் அதன் பலன்களை விளைவித்தது.

ட்ரம்ப் அவரது அண்மையில் உரையில், பாசாங்குத்தனத்தில் அடித்தளமிட்டிருந்த ஏழு தசாப்த கால அமெரிக்க கொள்கையை மாற்றிய மைத்தார். ஜெருசலேமின் அந்தஸ்து, இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதே அமெரிக்க வெளியுறவுத்துறையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக இருந்துள்ளது. என்றாலும், அடுத்தடுத்து வந்த அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள், ஜனநாயகக் கட்சி ஆகட்டும் அல்லது குடியரசுக் கட்சி ஆகட்டும் ஒன்று போல, தூதரகத்தைக் கொண்டு செல்வதற்குச் சூளுரைத்துள்ளனர்.


ஆனால், பதவிக்கு வந்ததும் அந்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கி உள்ளனர். அதேபோல, அந்நகர்வுக்கு அண்மித்து ஒருமனதாக அமெரிக்க காங்கிரஸ் வாக்களித்த அதே வேளையில், இடம் மாற்றுவதை ஒத்திப்போடுவதற்குத் தேசிய பாதுகாப்பு விலக்குரிமையை ஜனாதிபதிக்கு வழங்கியது.

(கேள்வி தொடரும்...)




22. 

இந்த தட்டிலுள்ள வடையினை எண்ணி அதனை உரோமன் இலக்கத்தில் எழுதுக. ..........................

23. 


இவ்வுருவின் சுற்றளவு யாது?

..........................


24. 

இங்கு நிறந்தீட்டிய பகுதியைப் பின்னத்தில் தருக.

..........................

25. ஒரு கூடையில் 24 அப்பிள்கள் உண்டு ஒவ்வொன்றினையும் இரண்டு துண்டுகளாக்கிய பின்னர் 8 பேருக்கு சமமாக கொடுத்தால் ஒருவருக்கு எத்தனை துண்டுகள் கிடைக்கும்? ..........................

26. 36cm நீளமுள்ள முக்கோண வடிவ செப்புக்கம்பி ஒன்றை நேராக்கி அதனில் சதுர வடிவ உரு ஒன்றை செய்தால் அந்த சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது? ..........................





27. 

நிறந் தீட்டப்பட்ட பகுதியின் பின்னத்தை தசமதானத்தில் எழுதுக. ..........................

28. கிளி/ பாரதி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் 926, மாணவிகள் 982 ஆகும். இப்பாடசாலையில் மொத்த மாணவர் எண்ணிக்கை யாது? ..........................

**பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.**

29. மகிழ்ச்சி என்ற உணர்வை வெளிப்படுத்தும் முகம் எது?

1)  2)  3)  4) 

30. வாசனை மிக்க பூ எது?

1) போசன்விலா 2) மாதுளை 3) றம்புட்டான் 4) பவளமல்லிகை



# கல்விக்கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் ①

சுட்டெண்: .......................... பகுதி I நேரம்:- 45 நிமிடம்

**01. பின்வரும் பாடலை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

பண்ணிய பாவம் எல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின் முன் இங்கு
நசிந்திடல் வேண்டும் அன்னாய் (சுப்பிரமணிய பாரதியார்)

**இப்பாடலினைக் கொண்டு 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

1. பாரதியார் இப்பாடலில் யாரிடம் வேண்டுதல் செய்கிறார்?

..........................

2. பாடலில் உள்ள அஃறிணை, ஒருமை, பெயர்ச்சொல் ஒன்று தருக.

..........................

3. புண்ணியம் என்ற சொல்லுக்குரிய எதிர்க்கருத்துடைய பதத்தினை எழுதுக.

..........................

4. சுப்பிரமணிய பாரதி பயன்படுத்திய உவமைத்தொடரை குறிப்பிடுக.

..........................

5. பாரதி இப்பாடலில் வேண்டும் என்ற சொல்லினை எத்தனை தடவைகள் பயன்படுத்தியுள்ளார்?

..........................

6. ஆதி - அந்தம் போல; தொடங்குதல்.

..........................

(6x1=6 புள்ளி)

**02. தரப்பட்ட வாக்கியத்தினை வாசித்து பொருத்தமான முடிக்கும் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.**

1. பாடசாலை மாணவர்களாகிய நாங்கள் கல்விச்சுற்றுலா ஒன்றை .......................... (போனோம், மேற்கொண்டோம்)
2. தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக வருமானம் .......................... (கிடைக்கின்றது, இலாபம்)

(2x1=2 புள்ளி)

**03. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து கீறிடுக.**

1. வேதனையால் பச்சைக்கிளி ..........................குரல் எழுப்பியது. (அவலக், அவளக், அவழக்)
2. இதமாக இளந்தென்றல் மேனியை .......................... சென்றது.

(தழுவிச், தலுவிச், தளுவிச்)

(2x1=2 புள்ளி)

**04. இங்கு தரப்பட்டுள்ள தனி வாக்கியங்களை கூட்டு வாக்கியமாக எழுதுக.**

1. 1) மோகன் கடைக்குச் சென்றான்.
2) மோகன் பொருட்களை வாங்கினான்.

..........................

..........................

**அடைப்புக்குள் காணப்படும் சொற்களுக்கும் குறியீடுகளுக்கும் ஏற்ப 7, 8, 9 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான் | - ⦶ | நீ | - ⊗ | இன்று | - ✧ |
| எங்கே | - ☆ | எல்லோரும் | - ◎ | செல்கிறாய் | - $ |
| நாங்கள் | - # | வருவேன் | - ⧈ | பாடசாலைக்கு | - ✻ |

7. அர்த்தமுள்ள வாக்கியம் ஒன்றினைச் தெரிவு செய்க.
   1) ⦶ # ⊗ $  2) ⊗ ✧ ✻ ⧈  3) ⦶ ✧ ✻ ⧈


8. வினா வாக்கியம் ஒன்றைத் தெரிவு செய்க.
   1) ⦶ ⧈  2) ☆ $  3) ☆ ✻


9. ஒரு எழுத்துச் சொல் ஒன்று தெரிவு செய்க.
   1) ✧  2) ⦶  3) ⊗

**தரப்பட்ட தரவினைக் கொண்டு 10ம், 11ம் வினாக்களுக்கு விடை தருக.**





10. வட்டத்தினுள் மட்டும் வரும் இலக்கம் எது?
    1) 5  2) 6  3) 7
11. வட்டம், சதுரம், முக்கோணி ஆகிய மூன்றுக்கும் உள்ளே உள்ள இலக்கம் எது?
    1) 1  2) 2  3) 4
12. பின்வரும் உருக்களில் சதுர முகியினை அமைக்க முடியாத உருவினைத் தெரிவு செய்க.





13.



1. இதில் 5ற்கு எதிரிரேயுள்ள இலக்கம் எது?
   1) 4  2) 6  3) 3
2. இலக்கம் 4ற்கு எதிரேயுள்ள இலக்கம் எது?
   1) 1  2) 5  3) 6


14.


இதில் எத்தனை முக்கோணிகள் உண்டு?
1) 8  2) 15  3) 14




15.


இவ் திண்ம உருவில் எத்தனை முகம் உண்டு?
1) 1  2) 2  3) 3

16.


இங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர் ஆகும்?
1) 7  2) 10  3) 9


**தரவினைக் கொண்டு 17ம், 18ம், 19ம், வினாக்களுக்கு விடை தருக.**




17.  அப்பிள் ஒன்றின் விலை யாது?
    1) 10.00 ரூபா  2) 20.00 ரூபா  3) 8.50 ரூபா

18.  மாம்பழம் ஒன்றின் விலை யாது?
    1) 10.00 ரூபா  2) 20.00 ரூபா  3) 8.50 ரூபா

19. 2 மாம்பழம், 3 அப்பிள் ஆகியவற்றின் மொத்தப் பெறுமதி யாது?
    1) 70.00 ரூபா  2) 90.00 ரூபா  3) 80.00 ரூபா

20.


ஒரு செங்கல்லின் விலை ரூ. 50.00 எனின் இங்கு அடுக்கப் பட்டுள்ள செங்கற்களின் பெறுமதி எவ்வளவு?
1) ரூ. 300.00  2) ரூ.550.00  3) ரூ. 600.00

**தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு 21ம், 22ம் வினாக்களிற்கு விடை தருக.**

பெற்றவர் இடத்தில் மரியாதை
பெரியவர் இடத்தில் மரியாதை
சுற்றவர் இடத்தில் மரியாதை
காட்டி நடப்பது ஒழுக்கம் என்போம்.

21. இங்கு பெற்றவர் என்று கூறப்படுவது -
    1) பிள்ளைகள்  2) தந்தை, தாய்  3) ஆசிரியர்கள்
22. கற்றவர் என்பது -
    1) செல்வந்தர்கள்  2) அயலவர்கள்  3) படித்தவர்கள்
23. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழிக்குப் பொருத்தமான கருத்து
    1) அடம்பன் கொடியும் சேர்ந்தால் பலமானது  2) விடாமுயற்சி பலன் தரும்  3) ஒற்றுமையே பலம்
24. கந்தையானாலும் கசக்கியுடு என்பதன் கருத்து
    1) ஏழையானாலும் சிறப்பாக வாழவேண்டும்.  2) பழைய உடுப்பை கசக்கி உடுக்க வேண்டும்.
    3) பொறுத்தார் பூமி ஆழ்வார்.
25. மாதாந்த சஞ்சிகை என்பது
    1) ஒவ்வொரு நாளும் வெளிவருதல் 2) ஒவ்வொரு மாதமும் வெளிவரும்  3) இடை சுகம் வெளிவரும்
26. ஆற்றில் எப்போதும் இருப்பது  1) மீன்  2) படகு  3) நீர்
27. பத்திரிகை ஒன்றில் அதிகமாக இருப்பது  1) விளம்பரம்  2) படங்கள்  3) சொற்கள்

# போரின் பின்னர் எஞ்சிய மக்களுக்கு என்ன தான் வெட்டிப் பிடுங்கியது அரசு?

## பட்டியலிட முடியுமா என டிலானுக்கு விக்கி சவால்

யாழ்ப்பாணம், டிசெ.23

“இறுதிப் போரில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களை கொத்துக் குண்டுகளை வீசிக் கொன்றது இலங்கை இராணுவம். பல லட்சம் மக்கள் நிரந்தர ஊனமுள்ளவர்களாக மாற்றப்பட்டனர். மூன்று இலட்சம் மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப் பட்டன. இது தொடர்பில் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளாத இலங்கை அரசு, போரின் பின்னர் எஞ்சிய மக்களுக்கு என்ன செய்தது என்பதைப் பட்டியலிட முடியுமா?

இவ்வாறு அமைச்சர் டிலான் பெரேராவிடம் காட்ட மாகக் கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட மலேசியப் பிரதமரை வடக்கு முதலமைச்சர் கொழும்பில் சந்தித் துப் பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது வடக்கின் நிலை அறிந்து உதவிகளை வழங்கக் குழுஒன்றை அனுப்புவதாக மலேசியப் பிரதமர் வடக்கு முதல்வரிடம் உறுதியளித்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமைச்சர் டிலான் பெரேரா, ‘ மத்திய அரசு வழங்கும் நிதியையே சரியாகப் பயன்படுத்தாத முதலமைச்சர் விக்கி, மலேசியா வழங்கும் நிதியை என்ன செய்வார் என்று புரியவில்லை’ எனக் கூறியிருந்தார்.

அமைச்சர் டிலானின் கருத்துக்கு நேற்று ஆதாரங் களுடன் பதிலடி கொடுத்தார் வடக்கு முதலமைச்சர்.

அவர் தனது பதிலில் தெரிவித்துள்ளவை வரு மாறு:-

நாட்டின் அனைத்துத் தர மக்களினதும் முன்னேற் றத்திற்கும் மேம்பாட்டிற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் தினமும் பாடுபடுகின்றவர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்கின்ற மத் திய அமைச்சரவையின் அமைச்சர் குழாத்தில் அங்கம்; வகிக்கின்ற சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா, தரவுகள் எதையாவது பெற்று இந்த அறிக்கையை வெளியிட்டாரா அல்லது எழுந்தமானமாக வடமாகாணசபையைக் குறைகூற வேண்டும் என்ற அபிப்பிராயத்தில் இக்கருத்தைத் தெரிவித்தாரா அல்லது இலங்கைத் தமிழ் மக்களுக்கு உலக மக்களிடம் இருந்து உதவி கிடைப்பதை எப்படி யாவது தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவ் வாறு கூறினாரா அல்லது பத்திரிகைகளுக்கு அவர் கூறியமை விளங்கவில்லையா என்பதை நான் அறி யேன்.

எனினும், பொதுமக்களுக்கு அரசின் நாடகப்பாணி யிலான பொய்ப்பிரசாரங்களை விளக்குவதற்கு எனக் கொரு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக டிலான் பெரேரா வுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளில் வடமாகாணசபைக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அதில் வழங்கப்பட்ட கட்டுநிதி செலவழிக்கப்பட்ட தொகை போன்ற விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை அமைச்சரின் பார்வைக் கும் பொதுமக்களின் பார்வைக்குமாக இதன் கீழ் சமர்ப் பிப்பதில் மகிழ்வடைகின்றேன். அதில் மத்திய அரசாங்கம் வழங்கும் நிதியைப் பயன்படுத்தாதற்குப் பதிலாக மத்திய அரசாங்கம் எமக்குத் தருவதாக உறுதிமொழி அளித்த பணம் இதுவரை வந்து சேராமையே உண்மை என்பது புலப்படும்.

இவ்வருடம் ரூபா 850.12 மில்லியன் ரூபா அரசாங்கத்திடம் இருந்து எமக்குக் கிடைக்க வேண்டும். இது வரையில் கிடைக்கவில்லை. கிடைத்த நிதி அவ்வ ளவும் செலவாகிவிட்டது.

முப்பது ஆண்டுகால நீண்ட போரிரால் பாதிக்கப் பட்ட மக்களின் வதிவிடம், தொழில் முயற்சி, வாழ்வாதார நிகழ்ச்சிகளை மேம்படுத்துவதற்காக ஏனைய மாகா ணங்களை விட கூடுதலான நிதி வடக்கு கிழக்கு மாகா ணங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கை பலமான எதிர்ப்புக்களுடன் மறுக்கப்பட்ட நிலையில் மிக மிக சொற்ப தொகையே வடமாகாணத் திற்கு ஒதுக்கப்படுகின்றது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுக்குக் கூட முழுமையான நிதி வழங்கப்படுவ தில்லை.

ஏற்கனவே நான் வெளியிட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் வழங்கப்பட்ட கட்டுநிதி முழுவதும் செலவு செய்யப்பட்டுள்ளமை அதனூடாகக் தெளிவாக மக்கள் அறிந்து கொள்ள முடியும். சென்ற வருடம் தரப்பட்ட கட்டு நிதிக்கு மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டமை புலப்படுகிறது. மேலும் ஒதுக்கப்பட்ட தொகையை பெறு வதற்குக்கூட பலமுறை விண்ணப்பித்து நெருக்குதல் களைக் கொடுத்து வலிந்து பெறவேண்டிய ஒரு கட்டா யத்தில் நாம் உள்ளோம். டிலான் பெரேரா தமக்குத்



தெரியாத விடயங்களைத் தெரிந்தவர் போலப் பொது மக்கள் இடையிலே பகிர்வதை நிறுத்த வேண்டும்.

அண்மைக்காலத்தில் மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து அப்பகுதியிலுள்ள மக்கள் பாதிப்புக்களுக்கு உள்ளானபோது அரசு காட்டிய ஆர்வமும் வலிந்து மேற்கொண்ட உதவிகளும் இடரில் அகப்பட்ட மக்களை பாதுகாப்பதற்கான அவசர உதவிகளும் நாடறிந்தவை. இவை அரசாங்கம் என்ற நிலைக்கு ஒரு படி மேலாக மனிதாபிமான ரீதியில் ஆற்றப்பட்ட சேவைகள் என்ப தால் பாராட்டிற்குரியன.

ஆனால், 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது ஸ்ரீலங்கா இராணுவம் கொத்துக்குண்டுகளை வீசி சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்ததும் பல இலட்சக் கணக்கான மக்களை நிரந்தர ஊனமுற்றவர்களாக மாற்றியதும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் வாழ்விடங்களை அழித்து மண்ணோடு மண்ணாக்கி யதும் எமது ஸ்ரீலங்கா அரசுக்கு எந்த வித மனிதாபி மான உணர்வுகளையும் உண்டு பண்ணவில்லை. டிலான் பெரேராவுக்குக் கூட அவ்வாறான மனிதாபி மான எண்ணங்கள் எழுந்தனவோ நான் அறியேன்.

போர்முடிந்த பின்னராவது எஞ்சியுள்ள மக்க ளுக்கு ஸ்ரீலங்கா அரசு எவ்வகையான உதவிகளை வழங்கினார்கள் என்பதனை டிலான் பெரேரா எடுத்துக் கூற வேண்டும். அல்லது அதுபற்றிய விவரப்பட்டியல் கள் இருந்தால் அவற்றையாவது வெளியிட வேண் டும்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்க ளுக்கு அரசிசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட கடுமை யான தாக்குதல்கள் வாயிலாக ஏற்பட்ட பாதிப்புக்க ளுக்கு மனமுவந்து மனிதாபிமான ரீதியில் உதவிகளை ஆற்ற வந்த மலேசிய அரசின் பெருந்தன்மையைக் கூட எமது கௌரவத்திற்குரிய இராஜாங்க அமைச்ச ரால் பொறுக்க முடியவில்லை. அவ்வாறான பெருந் தன்மையை ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவமற்ற இவர் போன்றவர்களின் செயற்பாடே தமிழ் மக்களை விரக்தியின் விளிம்பிற்குக் கொண்டு சென்றுள்ளது.

வடமாகாணத்தின் முதலமைச்சராக நான் தெரிவு செய்யப்பட்ட அன்றைய தினத்தில் இருந்து இன்று வரை அந்த மக்களுடனேயே நான் வாழ்ந்து வருகின் றேன். அந்த மக்கள் பல்வேறு வாழ்வாதார உதவிக ளுக்காக என்னை நாடி வந்து தெரிவிக்கின்ற சோகக் கதைகள் எனது உள்ளத்தை பெரிதும் பாதித்துள்ளன. இந்த மக்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை ஆற்ற வேண்டுமென்ற அவாவிலேயே மலேசியப் பிரதம மந்திரி அனுப்பிய அழைப்பை நான் ஏற்றேன்.

அரசிடமும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் மலேசியப் பிரதமரிடமும் எமது தேவைகளையே தொடர்ந்து முன்வைத்து வருகின்றேன். எனது நிலை யில் டிலான் பெரேரா இருந்திருப்பாரேயாகில் அவரின் கோரிக்கைகளும் நடவடிக்கைகளும் என்னைவிடப் பலமடங்கு கூடுதலாகவும் கூரியதாகவும் அமைந்தி ருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே எம்மைக் குறைகூறி ஏற்கனவே நொந்து போன தமிழ் மக்களின் வெறுப்புக்களை மேன்மேலும் சம்பாதித்துக் கொள்வதற்குப் பதிலாக உண்மை நிலையை உணர்ந்துகொண்டு இம் மக்களின் அடிப் படைத் தேவைகளையாவது நிறைவேற்றுவதற்கு டிலான் பெரேராவும் அவர் சார்ந்த கட்சியின் அமைச் சுக்களும் முன்வரவேண்டும் என அன்பாக வேண்டு கோள் விடுக்கின்றேன். – என்றுள்ளது.



# ராஜ்யசபையில் டெண்டுல்கரின் கன்னி உரை காங்கிரஸ் கட்சியினரின் அமளியால் 'அவுட்'!

புதுடில்லி,டிசெ.23

இந்திய நாடாளுமன்ற மேல்சபையில்(ராஜ்ய சபையில்) மன்மோகன் சிங்குக்கு எதிராக அவதூறு வெளியிட்ட பிரதமர் மோடி மன்னிப்பு கேட்குமாறு காங்கிரஸ் கட்சியினர் அமளியில் ஈடுபட்டமையால் டெண்டுல்கரால் தனது கன்னிப்பேச்சை உரையாற்ற இயலவில்லை.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான சச்சின் டெண்டுல்கர் நாடாளுமன்ற மேல்சபையின் நியமன உறுப்பினராக உள்ளார். அவர் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் எம்.பி.யாக இருக்கின்ற போதும் இதுவரை விவாதங்களில் எதிலும் பங்கேற்கவில்லை. முதல் முறையாக நேற்று முன்தினம் தனது கன்னிப்பேச்சை நிகழ்த்த அவர் அனுமதி கேட்டிருந்தார்.

விளையாட்டு உரிமை மற்றும் இந்திய விளையாட்டின் எதிர்காலம் குறித்த விவாதத்தில் பங்கேற்பதற் காக அனுமதி கேட்டிருந்த அவருக்கு, அவைத்தலைவர் வெங்கையா நாயுடுவும் அனுமதி வழங்கி இருந்தார். நேற்றுமுன்தினம் மேல் சபை முதல் முறை ஒத்தி வைக்கப்பட்டு, 2 மணிக்குக் கூடிய போது டெண்டுல்கரை உரையாற்ற வெங்கையா நாயுடு அழைத்தார்.



அப்போது மன்மோகன் சிங்குக்கு எதிராக அவதூறு வெளியிட்ட பிரதமர் மோடியை அதற்காக மன்னிப்புக் கேட்குமாறு காங்கிரஸ் கட்சியினர் அமளியில் ஈடுபட்டமையால் டெண்டுல்கரால் உரையாற்ற முடியவில்லை. தனது இடத்தில் எழுந்து நின்று காங்கிரஸாரின் அமளியை அவர் வேடிக்கைப்பார்த்துக்கொண்டே நின்றார்.

டெண்டுல்கர் ஒரு கிரிக்கெட் ஜாம்பவான் என்றும், பாரத ரத்னா விருது பெற்றவர் என்றும் கூறிய வெங்கையாநாயுடு, அவரது பேச்சு இளைஞர்களுக்கு உத்வேகம் அளிப்பதாக இருக்கும் என்பதால் அவரை பேச அனுமதிக்குமாறு காங்கிரஸ் கட்சியினரைக் கேட்டுக் கொண்டார்.

எனினும் அவர்கள் அமைதியடையாதமையால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. இதனால் டெண்டுல்கரின் கன்னிப்பேச்சு நேற்றுமுன்தினம் இடம்பெறவேயில்லை.

(உ)

## ஆர்.கே.நகரில் தி.மு.க.வெற்றி நிச்சயம் என்கின்றார் வைகோ

மதுரை,டிசெ.23

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் வாக்காளர்களுக்கு ரூ.6 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் அநீதியை வென்று தி.மு.க. வெல்லும் என்று வைகோ கூறினார்.

சென்னையில் இருந்து நேற்றுக் காலை விமானம் மூலம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மதுரை வந்தார். விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் மேற்படி கருத்தை அவர் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-



ஆர்.கே.நகர் இடைத் தேர்தலின் போது '2ஜி' வழக்குத் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. கனிமொழி, ராசா ஆகியோர் நிரபராதிகள் என வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கது. இதனால் தி.மு.க. வினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அநீதி விழும், அறம் வெல்லும் என்று கலைஞர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் தி.மு.க.வினர் மற்றும் கூட்டணி கட்சியினர் தீவிரமாகப் பணியாற்றி உள்ளோம். கடந்த முறை ஆர்.கே. நகர் தொகுதியில் இடைத் தேர்தலின்போது ரூ.89 கோடி விநியோகச் செய்ததற்கான கடிதம் சிக்கியது. தற்போது அ.தி.மு.க.வினர் 90 சதவீதம் பண விநியோகம் செய்துள்ளனர்.

இதைத்தடுக்க தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. ஒவ்வொரு வாக்காளருக்கும் ரூ.6 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் அநீதியை வென்று தி.மு.க. வேட்பாளர் மருது கணேஷ் வெற்றி பெறுவார். - இவ்வாறு வைகோ மேலும் கூறினார்.

## ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் 77 வீத வாக்குப் பதிவு; முடிவு நாளை

சென்னை,டிசெ.23

தமிழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் 77.42 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. இது கடந்த பொதுத்தேர்தல் வாக்குப்பதிவை விட 10 சதவீதம் அதிகமா கும்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து காலியாக இருந்த ஆர்.கே.நகர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு நேற்றுமுன்தினம் இடைத்தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் இ.மதுசூதனன், தி.மு.க. சார்பில் என்.மருது கணேஷ், பா.ஜ.க. சார்பில் கரு. நாகராஜன், சுயேச்சையாக டி.டி.வி. தினகரன் உள்ளிட்ட 59 பேர் போட்டியிட்டனர்.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்குப் பிறகும் வாக்குச் சாவடிகளில் கூட்டம் குறையவில்லை. குறிப்பாக, நேதாஜி நகர், செரியன் நகர், காசிமேடு பகுதிகளில் உள்ள வாக்குப் பதிவுமையங்களில் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு நேரம் முடிந்ததால், வாக்குப்பதிவு மையங்களின் பிர தான வாயில்கள் மூடப்பட்டன.



அதற்கு முன்பாக வந்து வாக்குச் சாவடிகளில் வரிசையில் காத்திருந்த 11 ஆயிரம் வாக்காளர்களுக்கு 'டோக்கன்' வழங்கப்பட்டு, அவர்கள் மட்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். இரவு 7.20 மணி வரை வாக்குப் பதிவு நடந்தது. இறுதி நிலைவரப்படி 77.42 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன என மாவட்டத் தேர்தல் அதிகாரி கார்த்திகேயன் அறிவித்தார்.

ஆர்.கே.நகரில் கடந்த 2015 இடைத்தேர்தலில் 74.59 சதவீதமும், 2016 பொதுத்தேர்தலில் 67.69 சதவீதமும் வாக்குகள் பதிவாகின. கடந்த பொதுத்தேர்தலை விட தற்போது 10 சதவீத வாக்குகள் அதிகமாகப் பதிவாகியுள்ளன.

வாக்குப்பதிவு முழுமையாக முடிந்ததும் 258 வாக்குச்சாவடிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், விவிபேட் இயந்திரங்கள் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் முத்திரையிடப்பட்டன. பிறகு பொலிஸார், துணை இராணுவத்தினர் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையமான ராணி மேரி கல்லூரிக்கு அனுப்பப்பட்டன. அங்கு 'ஸ்ட்ராங் ரூம்' அறையில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு சீலிடப்பட்டன. அங்கு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன. நாளை காலை 11 மணி அளவில் முடிவுகள் தெரிய வரும்.

(உ)

## '2ஜி' வழக்கில் ஆதாரங்களுக்காக 6 ஆண்டுகள் காத்திருந்தமை வீண்

டில்லி,டிசெ.23


2ஜி வழக்கில் உரிய ஆதாரங்களுக்காக 6 ஆண்டுகளாகக் காத்திருந்தபோதும் அது வீணாகி விட்டது" என்று சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி.சைனி வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துசைனிகூறியவை வருமாறு: -

கடந்த 2011 இல் 2ஜி வழக்கு விசாரணை தொடங்கியது. இது தொடர்பானஉரிய ஆதாரங்களை யாராவது சமர்ப்பிப்பார்கள் எனக் கடந்த 6 ஆண்டுகளாக, கோடை விடுமுறை உட்பட அனைத்து வேலை நாள்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நீதிமன்றத்தில் காத்திருந்தேன். ஆனால், என் எதிர்பார்ப்பு வீணாகிவிட்டது. இது தொடர்பாக ஓர் ஆதாரம் கூடக் கிடைக்கவில்லை. வதந்திகளின் அடிப்படையிலான பொதுமக்களின் கருத்துகள்தான் இந்த விவகாரத்தை பூதாகரமாக்கின என்பது இதன்மூலம் தெரிய வருகிறது. ஆனால், இதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்க நீதித்துறை நடைமுறைகளில் இடம் இல்லை. இந்த வழக்கில் அரசுத் தரப்பு முதலில் தீவிரம் காட்டியது. அதன் பிறகு தனது குற்றச் சாட்டை உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தவறிவிட்டது என்றார்.

2ஜி அலைக்கற்றை வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கிய சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓம் பிரகாஷ்சைனி (57), டெல்லி காவல் நிலைய உதவி ஆய்வாளராகப் பணியைத் தொடங்கியவர்.ஹரியானாவை சேர்ந்த சைனி நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அரசு தேர்வு எழுதி டில்லி காவல் துறை உதவி ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தார். இதில் 6 ஆண்டுகள் பணியாற்றியவருக்கு மாஜிஸ்திரேட் பணியில் ஆசை பிறந்துள்ளது. அதற்கான தேர்வை எழுதிய பொலிஸாரில் அந்த வருடம் சைனி மட்டுமே தேர்வு செய்யப்பட்டார்.

நீதிபதி எம்.எஸ்.சபர்வால் 2002இல் ஓய்வுபெற்ற பின், அவரது இடத்தில் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக ஓ.பி.சைனி அமர்த்தப்பட்டார். 2ஜி அலைக் கற்றை வழக்குக்கு முன்பாக சைனிபல முக்கிய பிரமுகர்களின் வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கியவர். டில்லியில் நடைபெற்ற கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஊழல் வழக்கை விசாரித்தார். இதில் குற்றம் சாட்டப்பட்டிருந்த காங்கிரஸின் முக்கிய தலைவர் சுரேஷ் கல்மாதிக்கு நெருக்கமானவர்களை சிறைக்கு அனுப்பினார்.



சிறப்பு நீதிபதி சைனி வேதனை

டில்லி செங்கோட்டையில் டிசெம்பர் 22, 2000 இல் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதல் வழக்கும் சைனி விசாரித்ததில் முக்கியமானது.

இதை அடுத்து 2ஜி அலைக் கற்றை வழக்கு விசாரணையின் போதும் கனிமொழி, ஆ.ராசா உட்பட பல முக்கியமானவர்களை சைனி சிறைக்கு அனுப்பினார். மிகவும் உறுதியாக சட்ட விதிகளைப்பின்பற்றுவதில்பெயர் எடுத்த சைனி, கனிமொழியின் பிணை மனுவை நவம்பர் 2011 இல் தள்ளுபடி செய்தார்.

பெண் என்பதால் கனிமொழிக்கு பிணை கிடைத்து விடும் என அப்போது பலராலும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், செல்வாக்கான அரசியல்வாதியின் மகளாக கனிமொழி இருக்கின்றமையால் அவரைப பிணையில் விடமுடியாது என்று சைனி கூறிவிட்டார்.

'2ஜி' வழக்கை இவர் மிகக் கறாராக விசாரித்தார் என்று கூறப்படுகிறது.


(உ)

காலைக்கதிர்
Kalaikkathir



# தென்கொரிய உடற் பயிற்சி மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 29 பேர் உயிரிழப்பு





தென் கொரியாவிலுள்ள ஓர் உடற்பயிற்சி மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 29 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

தென் கொரியாவின் தென் பகுதியிலுள்ள நகரமான ஜெசெனில் எட்டு மாடிகள் கொண்ட கட்டடத்தின் தரைத்தளத்தில் இந்த தீ முதலில் எரியத் தொடங்கியது.

கொழுந்துவிட்டு எரிந்த தீ மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட புகைமூட்டம் பெரும்பாலும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்த விபத்தில், அங்கிருந்த பொருள்களுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இரண்டாவது மாடியில் ஒரு நீராவிக் குளியல் அறையில் சிக்கினர். தீயணைப்பு வீரர்கள் தேடும் பணியைத் தொடர்ந்து வருவதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.


''தீ மிகவும் விரைவாக நச்சுத்தன்மையை உருவாக்கியதால் பலரால் வெளியேற முடிய வில்லை'' என்று தேசிய தீயணைப்பு அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

தீ பாதிப்பிலிருந்து தஞ்சமடைந்த சுமார் 20 பேர் கூரை வழியாக மீட்கப்பட்டனர். மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சியோலுக்கு 168 கிலோ மீற்றர்கள் தென் கிழக்கே உள்ள இடத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்தத் தீயை அணைக்கும் பணியில் 60 தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டார்கள்.

அதிகளவிலான புகைமூட்டம் தேடுதல் மற்றும்



மீட்பு பணிக்கு இடையூறாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த கட்டடத்தில் ஓர் உடற்பயிற்சி மையம், உணவகங்கள் மற்றும் ஒரு பொது நீராவி குளியல் மையம் ஆகியவை உள்ளன.

# கேட்டலோனியா தேர்தலில் பிரிவினைவாதிகள் வெற்றி!

## ஸ்பெயினுக்கு அதிகரிக்கிறது நெருக்கடி

ஸ்பெயினின் கேட்டலன் பிராந்தியத்துக்கான நாடாளுமன்ற தேர்தலில் பிரிவினைவாத கட்சிகள் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறும் நிலையை நோக்கி செல்வதால், ஸ்பெயின் அரசாங்கத்துடன் கூடுதல் மோதல் போக்கு உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், கேட்டலோனியா ஸ்பெயினின் பாதி தன்னாட்சி பகுதியாக நீடிக்க விரும்பும் குடிமக்கள் கட்சியே தனித்து கூடிய இடங்களைப் பெற்ற கட்சியாக உள்ளது.

இதன் விளைவாக, அரசாங்கத்தை அமைப்பதற்கான உரிமையாருக்குவழங்கப்படும் என்பதில் குழப்பம்நிலவுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட கேட்டலோனிய சுதந்திரத்திற்கான பொதுமக்கள்கருத்தறியும்வாக்கெடுப்பை சட்டவிரோதமானது என்று அறிவித்த ஸ்பெயின் அரசாங்கம் அப்பிராந்தியத்தின் தன்னாட்சி உரிமையைப் பறித்தது டன் புதிய அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலையும் அறிவித்தது.

பெரும்பாலும் அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்டதில், கேட்டலோனிய சுதந்திர ஆதரவு கட்சிகளான ஒருங்கிணைந்த கேட்டலோனியா, கேட்டலோனியாவின் இடது குடியரசு கட்சி மற்றும் பாப்புலர் யூனிட்டி ஆகியன இணைந்து மொத்தம் 70 இடங்களை வென்று பெரும்பான்மை பெற்றுள்ளன.

தேர்தல் நிலைவரம் குறித்து தற்போது பிரஸ்ஸல்ஸில் தஞ்சமடைந்துள்ள கேட்டலோனியாவின் முன்னாள் அதிபரான பூஜ்டிமோன் கூறும்போது , ''கேட்டலன் குடியரசு வென்று விட்டதாகவும்'', ''ஸ்பெயின்



அரசு தோற்கடிக்கப்பட்டதாகவும்'' கூறியுள்ளார்.

''தற்போதைய நிலைமை திருத்தம், சரிசெய்தல் மற்றும் மீட்புக்கு'' வழிவகுத்துள்ளது என்று அவர் கூறினார்.

பூஜ்டிமோன் மீது ஸ்பெயின் வழக்கறிஞர்கள் கலகம் மற்றும் தேசத்துரோக குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளனர்.

மொத்தம் 135 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில், கேட்டலோனியா ஸ்பெயினுடன் இணைந்திருப்பதை வலியுறுத்தும் குடிமக்கள் கட்சி 25 சதவீத வாக்குகளை பெற்றது டன் 37 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட குடிமக்கள் கட்சியின் தலைவரான இனஸ் அரிமடாஸ், தனது கட்சி ''வெற்றியடைந்துள்ளதாக'' தெரிவித்தார். மேலும், கூட்டணி அமைப்பது என்பது ''கடினமென்றாலும் அதற்கு முயற்சி செய்வோம்'' என்றும் அவர் கூறினார்.




# ஜெருசலேத்தை தலைநகராக ஏற்கும் அமே. முடிவுக்கு ஐ.நா. தகுந்த பதிலடி

## பொதுச்சபை மிகப் பெரும்பான்மையுடன் தீர்மானம்

ஜெருசலேத்தை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்து அமெரிக்கா வெளியிட்ட அறிவிப்பை நிராகரிக்கும் தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையில் அபார வெற்றி பெற்றுள்ளது.

128 நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளன. 35 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. 9 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன.

ஜெருசலேம் நகரத்துக்கு இஸ்ரேலும் பலஸ்தீனமும் உரிமை கொண்டாடி வரும் நிலையில் இது ஒரு தீர்க்கப்படாத சர்ச்சையாகத் தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில் ஜெருசலேத்தை இஸ்ரேலின் தலைநகராக ஏற்பதாக அண்மையில் அமெரிக்கா அறிவித்தது.

''புனித ஜெருசலேம் நகரத்தின் பண்பையும், நிலையையும், மக்கள்வகைப்பாட்டையும் மாற்றுகிற எந்த முடிவுக்கும் நடவடிக்கைக்கும் சட்ட மதிப்பு இல்லை, அது செல்லத்தக்கதும் இல்லை,'' என்று ஒரு தீர்மானம் குறிப்பிடுகிறது.

இது தொடர்பான முந்தைய பாதுகாப்புக் கவுன்சிலில் தீர்மானத்துக்கு ஏற்ப அத்தகைய முடிவுகள் திரும்பப் பெறப்படவேண்டும் என்றும், 1980 இல் நிறைவேற்றப்பட்ட பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் ஒன்றின்படி உறுப்பு நாடுகள் தங்கள் தூதரகங்களை புனித



நகரான ஜெருசலேத்தில் அமைக்கக்கூடாது என்றும் தற்போது பொதுச் சபை நிறைவேற்றிய தீர்மானம் குறிப்பிடுகிறது.

இந்த தீர்மானத்தை ஆதரிப்பவர்களுக்கு நிதியுதவிகள் நிறுத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்த பிறகும் இப்போது இத்தீர்மானம் வெற்றி பெற்றுள்ளது.

மிரட்டலையும், அச்சுறுத்திப் பணியவைக்கும் முயற்சியையும் நிராகரிக்க வேண்டும் என்று வாக்கெடுப்புக்கு முன்னதாக பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்பார்க்கப்படும் முடிவினை முற்றாக நிராகரிக்கப் போவதாக வாக்கெடுப்புக்கு முன்னதாகக் கூறிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ ஐ.நா.வை 'பொய்களின் அவை' என்று குறிப்பிட்டார்.

# ஸ்டீவ் ஸ்மித் விஸ்வரூபம்



இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் தொடரை ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியதில் அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித்தின் பங்கு அளப்பரியது. பிரிஸ்பனில் நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் அவர், ஒரு காவியமான இன்னிங்ஸை விளையாடி சதம் அடித்தமையுடன் இங்கிலாந்து அணி வீரர்களால் கடைசி வரை வீழ்த்த முடியாத வீரராகவும் திகழ்ந்தார்.

பேர்த்தில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட்டில் 399 பந்துகளை சந்தித்து 239 ஓட்டங்கள் விளாசி இங்கிலாந்து அணியின் இதயத்தை உடைத்தெறிந்தார். ஆஷஸ் தொடரில் தனித்துவமான துடுப்பாட்டத்தால், அனைத்து கால சிறந்த துடுப்பாட்ட வீரரான டொன் பிராட்மேனுடன் ஒப்பிட்டு புகழப்படும் நிலைக்கு உயர்ந்துள்ளார் ஸ்மித்.

ஆஷஸ் வெற்றி நாயகனான ஸ்மித் துடுப்பாட்டத்தில் ஏறக்குறைய இங்கிலாந்து அணியை ஒற்றை ஆளாகக் கையாண்டு ஜோ ரூட் குழுவினரை வீழ்ச்சியடையச் செய்துள்ளார் என்றே கூறவேண்டும். 3 போட்டிகள் மட்டுமே முடிவடைந்துள்ள நிலையில் ஸ்மித், 4 இன்னிங்ஸ்களில் 142 சராசரியுடன் 426 ஓட்டங்களை வேட்டையாடி உள்ளார். 28 வயதான அவர், துடுப்பாட்டத்தில் தனக்கே உரிய பாணியைக் கடைபிடித்து வருகிறார்.



பந்து வீச்சாளர்களுக்கு எதிராக ஸ்டம்புகளை விட்டு நகர்ந்து சென்று, பல்வேறு அசைவுகளை மேற்கொண்டபடி துடுப்பெடுத்தாடும் ஸ்மித் இதுவரை 59 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 62.32 என்ற விகிதத்தில் ஓட்டக் குவிப்பு சராசரியை வைத்துள்ளார்.

இதுதான் கிரிக்கெட் வரலாற்றில் டொன் பிராட்மேனுக்கு அடுத்த இடத்தில் ஸ்மித்தை நிலைகொள்ளச் செய்துள்ளது. 1928 முதல் 1948ஆம் ஆண்டு வரை விளையாடிய பிராட்மேனின் சராசரி 99.94.

2010ஆம் ஆண்டு சுழற்பந்து வீச்சுடன். பல்துறை வல்லுநராகத் துடுப்பாட்ட வரிசையில் 8 ஆவது வீரராகத்தான் டெஸ்ட் கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்தார் ஸ்மித். ஆனால், 7 ஆண்டுகளில் அவரது வளர்ச்சி விஸ்வரூபம் கண்டுள்ளது. டெஸ்ட்டில் தொடர்ச்சியாக கடந்த 4 ஆண்டுகளில் அதிக சராசரியுடன் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் வேட்டையாடி உள்ளார்.

டெஸ்ட்டில் ஸ்மித் 22 சதங்கள் அடித்துள்ளார். இதில் 14 சதங்கள் அணித்தலைவனாகப் பொறுப்பேற்ற பிறகு வந்தவை. அதிலும் இவை 29 ஆட்டங்களில் அடிக்கப்பட்டவை என்பது கூடுதல் சிறப்பு. பிராட்மேன் அணித் தலைவராக செயலாற்றிய காலக்கட்டத்தில் 24 போட்டிகளில் 14 சதங்கள் எடுத்திருந்தார். ஆஷஸ் தொடரில் இரட்டை சதம் அடித்த ஆஸ்திரேலிய அணித்தலைவர்களில் ஸ்மித், 5ஆவது நபர். இந்த வகையில் பிராட்மேன் இருமுறை இரட்டைச் சதம் அடித்துள்ளார்.

பேர்த் டெஸ்ட்டில் ஸ்மித் ஏறக்குறைய 3 நாள்கள் துடுப்பாட்டம் செய்தார். அவரது தனித்தன்மை வாய்ந்த துடுப்பாட்டமும் இம்முறை ஆஷஸ் தொடர் ஒரு தரப்பாக அமைய முக்கிய காரணங்களுள் ஒன்று. இதுதான் இங்கிலாந்து அணியிடம் இருந்து ஆஸ்திரேலியாவை பெரிய அளவில் வேறுபடுத்திக் காட்டியது. இந்தத் தொடரில் வழக்கத்துக்கு மாறான துடுப்பாட்ட நுட்பங்களை ஸ்மித் கையாண்டமையும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அவர், கையாண்ட சில துடுப்பாட்ட நுட்பங்கள், டொன் பிராட்மேன் பயன்படுத்திய நுணுக்கங்களுடன் ஒன்றிய வகையில் இருந்தன.

பிராட்மேன் மட்டையை தாழ்வாகவே சுழற்றுவார். அதே வகையிலான நுட்பத்தை ஸ்மித்தும் மேற்கொண்டார். காற்றில் பறந்து செல்லும் வகையிலான 'ஷொட்'களை ஸ்மித் அரிதாக விளையாடுவார். அதே போல் பந்துகளை 'கட்' செய்வதிலும் குறைந்த அளவிலான 'ரிஸ்க்'கையே எடுப்பார். இதுபோன்ற யுத்திகளால் அவருக்கு எதிராக களவியூகங்களை அமைப்பதில் எதிரணியினர் பலமுறை திக்குமுக்காடவும் செய்துள்ளனர்.

ஆஷஸ் டெஸ்ட் தொடரை உள்நாட்டில் ஒளிபரப்பும் ஆஸ்திரேலிய தொலைக்காட்சி ஒன்று, ஸ்மித் பேட்டிங்கின் போது ஒரு பந்து வீச்சாளரை சந்திப்பதற்கு முன்பு 23 வகையான உடல் அசைவுகளை வெளிப்படுத்துகிறார் எனத் தெரிவித்துள்ளது.

ஸ்மித் துடுப்பைக் கையாளும் விதம் குறித்து இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் நாசர் ஹுசைன் கூறும்போது, ஸ்மித் துடுப்பைக் கையில் பிடிக்கும் விதம் பற்றி இளம் கிரிக்கெட் வீரருக்கு நாம் பயிற்சி கொடுக்க முடியாது. கையின் கீழ் பகுதி மூலம் அவர் மட்டையை வலுவாக கையாள்கிறார். ஆனால் அவரது துடுப்பு , பந்தை எதிர்கொள்ள கீழே இறங்கும் போது முழுமையாகப் பந்தை சந்திக்கிறது. இதில் அவரது கண்களும் கையும் ஒருங்கிணைந்து தனித்துவமாகச் செயற்படுகின்றன என்றார்.



அதீத 'போர்மில்' இருக்கும் ஸ்மித், ஆஷஸ் தொடரின் எஞ்சிய இரு ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணியை மேலும் ஒரு கை பார்க்காமல் விடமாட்டார் என்றே கருதப்படுகிறது. தொடரை ஏற்கெனவே கைப்பற்றி விட்டதால் எந்தவித அழுத்தமும் இல்லாமல் அவர் எளிதாக ஓட்டங்கள் குவிக்க முடியும். இந்த வாய்ப்பை ஸ்மித் சரியாகப் பயன்படுத்தக்கூடும். (உ)

### தேர்தலை இலக்கு வைத்து:

## குழந்தைகளுடன் விளையாடும் நாமல்

கொழும்பு, டிசெ. 23

அம்பாந்தோட்டை – தங்காலை பகுதியில் உள்ள நவஜீவன சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ அங்குள்ள சிறுவர்களைச் சந்தித்துள்ளார்.

இதன்போது அந்த நிலையத்தில் இருந்த சிறுவர்களுடன் நாமல் விளையாடும் காட்சிகள் அடங்கிய காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகி உள்ளது. இந்த காணொலியை நாமல் தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலம் நெருங்கிவிட்ட நிலையில் நாமல் சமூக சேவைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளார் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



மேலும், குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுவது மகிழ்ச்சி தருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பதிவிட்டுள்ளார்.

## லஞ்ச ஊழல் சட்டத்தில் விரைவில் திருத்தங்கள்

கொழும்பு, டிசெ.23

30 வருடகாலம் பழைமை வாய்ந்த இலஞ்ச ஊழல் சட்டம் மீண்டும் திருத்தி அமைக்கப்படவுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்விலேயே நேற்றுமுன்தினம் சரத் ஜயமான்ன இவ்வாறு குறிப்பிட்டார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்தச்சட்டத்தில்உள்ளஓட்டைகளைப் பயன்படுத்தி குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்க முனையும் நபர்களுக்கான வழிவகைகளை முற்றாக இல்லாது செய்வதே எமது நோக்கமாகும்.

சட்டத்தில் சேர்க்க வேண்டிய திருத்தங்கள் பற்றிக் கல்விமான்கள் குழுவின் ஊடாகக் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. அடுத்த சில மாதங்களுக்குள் திருத்தங்களைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்– என்றார். (ஐ)

# டோனியை இனி சுதந்திரமாக விளையாட அனுமதிப்போம்!

## ரி20 அணித் தலைவர் ரோஹித் சர்மா கருத்து

இலங்கைக்கு எதிரான கட்டாக் ரி20 போட்டியில் டோனி 4ஆவது துடுப்பாட்ட வீரர் நிலையில் இறங்கி 22 பந்துகளில் 39 ஓட்டங்களை விளாசி இந்திய அணியை 180 ஓட்டங்களுக்கு இட்டுச் சென்றார். இதனால் அந்த ஆட்டம் பிறகு இலகு வெற்றியில் முடிய, இது குறித்து அணித் தலைவர் ரோஹித் சர்மா தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

ஆட்டம் முடிந்த பிறகு ரோஹித் சர்மா கூறியவை வருமாறு:-

நாணயச் சுழற்சி முடிவு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தாது என்று நான் ஆரம்பத்திலேயே கூறினேன். ஆட்டம் முழுதும் பனிப்பொழிவு இருந்தது. 40 ஓவர்களும் பனிப்பொழிவு உண்டு என்று எதிர்பார்த்தோம். மாற்றம் எதுவும் இல்லை. இன்னிங்ஸின் பின் பகுதியில் துடுப்பாடுவது கடினமாக அமைந்தது.

தொடக்கத்தில் துடுப்பாட்டம் அவ்வளவு கஷ்டமாக இல்லை. ராகுலைத் தொடக்கத்தில் களமிறக்கியமை நல்ல உத்தியாக அமைந்தது. ஒருநாள் தொடரில் ராகுல் இல்லை, ஆனால் இங்கு வந்து தான் அந்த அணியில் இருந்திருக்க வேண்டும் என்பதை நிரூபித்தார்.

டோனி, பாண்டே அருமையாக இன்னிங்ஸை முடித்தனர். நடுவில் பாண்டேவுக்கு சரியாக துடுப்பாட்டம் கிடைக்கவில்லை. எனவே, இங்கு வந்து இவ்வாறு ஆடியமை அருமையானது. டோனி மிகச் சிறப்பு. 4ஆம் நிலை அவருக்கு உண்மையில் சாதகமாக உள்ளது.

அவர் நமக்காக ஏகப்பட்ட போட்டிகளில் ஆடியுள்ளார். ஏகப்பட்ட போட்டிகளை வென்று கொடுத்துள்ளார். எனவே, நாங்கள் அவர் 4ஆம் நிலையில் சுதந்திரமாக விளையாட அனுமதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். இதனால் மணீஷ் பாண்டே, தினேஷ் கார்த்திக் ஆட்டத்தை முடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். மேலும் டோனி நீண்ட காலமாக போட்டிகளை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்துள்ளார், இப்போது அவர் 4ஆம் நிலையில் இறங்கி சுதந்திரமாக ஆட வேண்டும், நெருக்கடி, அழுத்தமில்லாமல் அவர் சுயாதீனமாக ஆட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

கடினமான பனிப்பொழிவில் சாஹல், குல்தீப் யாதவ் அருமையாக வீசினர்.

- இவ்வாறு கூறினார் ரோஹித் சர்மா. (உ)

# மோசமான துடுப்பாட்டமே தோல்விக்குக் காரணம்!

## உபுல் தரங்க விளக்குகின்றார்



துடுப்பாட்டத்தில் மோசமாக செயல்பட்டமையே தங்கள் தோல்விக்குக் காரணம் என இலங்கை அணியின் தொடக்க வீரர் உபுல் தரங்கா கூறியுள்ளார்.

இலங்கை - இந்தியா இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ரி20 போட்டியில் இந்தியா 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

20 ஓவர்கள் முழுமையாகத் தாக்குப் பிடிக்காத இலங்கை 16 ஓவர்களிலேயே 87 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

இந்த போட்டியில் 23 ஓட்டங்கள் எடுத்த இலங்கை வீரர் தரங்கா தோல்விக்குப் பின்னர் கூறுகையில்,-

எங்களின் துடுப்பாட்டம்தான் தோல்விக்குக் காரணம்.

பந்துவீச்சில் ஆரம்பத்தில் நன்றாக நாங்கள் செயற்பட்டாலும் பின்னர் அதிகளவு பவுண்டரிகளை எதிரணிக்கு விட்டுக் கொடுத்தமையால் ஆட்டம் அவர்கள் கைக்குப் போய்விட்டது.

எங்கள் அணியின் துடுப்பாட்டம் மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. குறைந்தபட்சம் 20 ஓவர்கள் முழுவதுமாவது துடுப்பாடியிருக்க வேண்டும்.

தோற்பது சகஜம் என்றாலும், எதிரணியின் இலக்கை நெருங்கியிருக்க வேண்டும். இதையெல்லாம் நாங்கள் செய்யவில்லை.

ஆனாலும், இந்தத் தொடரில் சிறந்த வீரர்களுடன்தான் இலங்கை களமிறங்கியுள்ளது. -எனக் கூறியுள்ளார். (உ)

# விக்கெட் கீப்பராக டோனி ரி20 போட்டிகளில் சாதனை



சர்வதேச ரி20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகள் வீழ்ச்சிக்குக் காரணமான விக்கெட் கீப்பர் என்ற பெருமையை டோனி பெற்றுள்ளார். இலங்கை அணிக்கு எதிரான முதல் ரி20 போட்டியில், இந்திய விக்கெட் கீப்பர் டோனி இரண்டு ‘கட்ச்’ மற்றும் இரண்டு ‘ஸ்டம்பிங்’ செய்தார்.

இதன்மூலம் சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளின் வீழ்ச்சிக்குக் காரணமான முதல் விக்கெட் கீப்பர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

டோனி, ரி20 போட்டிகளில் இதுவரை 47 கட்ச் மற்றும் 27 ஸ்டம்பிங் செய்துள்ளார். 65 கட்ச் மற்றும் 7 ஸ்டம்பிங் செய்துள்ள தென்னாபிரிக்க விக்கெட் கீப்பர் டிவில்லியர்ஸ் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மேலும், ஒட்டுமொத்த ரி20 அரங்கில் டோனி, 200 விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளார். முதலிடத்தில் பாகிஸ்தானின் கம்ரான் அக்மல் (207), மூன்றாவது இடத்தில் இலங்கையின் சங்ககார (192) ஆகியோர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# பீபா வெற்றிக் கிண்ணம் முதலில் இலங்கை ரசிகர்கள் பார்வைக்கு



கொழும்பு, டிசெ.23

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு இடம்பெற உள்ள உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் (பீபா) வெற்றிக் கிண்ணத்தை முதலில் பார்வையிடும் சந்தர்ப்பம் இலங்கையின் விளையாட்டு ரசிகர்களுக்கு கிடைத்துள்ளது.

போட்டிக்கு முன்னதாக 54 நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ள அந்த கிண்ணம் முதலாவதாக இலங்கைக்கு எடுத்து வரப்பட உள்ளது.

ஜனவரி மாதம் 23ஆம் திகதி அந்தக் கிண்ணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பெற்றுக் கொள்ளப்பட்டு 24ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காட்சிக்காக வைக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் விசேட கூட்டம் நேற்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (உ)

(மற்றொரு செய்தி 19 ஆம் பக்கத்தில்...)

# கோஹ்லி - அனுஷ்கா தம்பதியரின் திருமண வரவேற்பில் பிரதமர் மோடி



புதுடில்லி, டிசெ.23

டில்லி தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற விராட் கோஹ்லி - அனுஷ்கா சர்மாவின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லியும், இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவும் கடந்த 11 ஆம் திகதி இத்தாலியில் உள்ள டுஸ்கேனியில் இருக்கும் சொகுசு விடுதியில் திருமணம் செய்து கொண்டனர். 4 ஆண்டு கால காதலுக்குப் பிறகு இந்தத் திருமணம் நடைபெற்றது. மிகவும் ரகசியமாக நடத்தப்பட்ட இந்த திருமண நிகழ்ச்சியில் நெருங்கிய உறவினர்களும், குடும்ப நண்பர்களும் மட்டுமே பங்கேற்றனர்.

இந்நிலையில், புதனன்று இந்தியாவுக்கு திரும்பிய புதுமண தம்பதி, பிரதமர் மோடியைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது நேற்று, டில்லி தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள மோடிக்குத் திருமண ஜோடி அழைப்பு விடுத்தனர்.

நேற்று டில்லி தாஜ் ஹோட்டலில் விராட் கோஹ்லி - அனுஷ்கா ஜோடியின் வரவேற்பு நிகழ்ச்சி நடந்துள்ளது. இதில், இருவீட்டாரின் உறவினர்கள் மட்டும் கலந்து கொண்டுள்ளனர். இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

அதைத் தொடர்ந்து வரும் 26ஆம் திகதி மும்பையில் மற்றொரு வரவேற்பு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதில், கிரிக்கெட் வீரர்கள், சினிமா பிரபலங்கள் என்று பலரும் கலந்து கொள்ள இருக்கின்றனர். இந்த வரவேற்பு நிகழ்சிகளைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இந்திய அணியுடன் கோஹ்லி இணைகிறார். அவருடன் அனுஷ்கா சர்மாவும் தென்னாபிரிக்கா சென்று புத்தாண்டை சிறப்பிக்க உள்ளனர். இதையடுத்து மும்பை திரும்பும் அனுஷ்கா சர்மா, ஷாருக்கான் நடிக்கும் புதிய படத்தில் நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முற்றவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஇடத்தில்பூதவுடலைத் தகனம்செய்வதுபொதுத்தொல்லை என மனுதாரரின் சட்டத்தரணி வி.மணிவண்ணன் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். அவரின் விண்ணப்பத்தை நிராகரித்த யாழ்ப்பாணம் பொலிஸார், தேரரின் பூதவுடலை முற்றவெளியில் தகனம் செய்ய அனுமதி கோரினர்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான், தேரரின் பூதவுடல் தகனம் செய்ய அனுமதிக்கப்படுவதாகத் தெரிவித்து மனுவைத்தள்ளுபடி செய்தார்.

தேரரின் உடலை யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் தகனம் செய்வதற்கு யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் பெருமெடுப்பில் ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் தேரரின் உடலைத் தகனம்செய்வதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என வரதராஜன் பார்த்தீபன், கமலக்கண்ணன் ஆகியோர் சட்டத்தரணி மணிவண்ணன் ஊடாக யாழ்.நீதிமன்றில் நேற்றுக் காலை வழக்குத் தாக்கல் செய்தனர்.

தாக்கல் செய்யப்பட்ட மனு மீதானவிசாரணையைநேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு விசாரணைக்கு நியமித்தது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.

மனுவில்குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளான யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர், பொலிஸ்பொறுப்பதிகாரி, யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மற்றும் யாழ். நாகவிகாரையின் விகாராதிபதி ஆகியோரையும் மன்றில் முன்னிலையாகக் கட்டளையிடப்பட்டது.

இதன்போது வழக்குத் தொடுநர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலான 12 சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

தேரரின் உடல் எரிக்கப்படும் இடமானது புனித பிரதேசம் எனவும், யாழ்.கோட்டை முனியப்பர்ஆலயம், பொது நூலகம், பொதுச் சந்தை, துரையப்பா விளையாட்டரங்கு போன்ற பொதுமக்கள் கூடுமிடங்கள் உள்ளன என்றும், வெட்ட வெளியில் சடலத்தை எரிப்பது என்பது யாழ்.மக்களின் மரபுகள், பாரம்பரியங்கள் போன்றவற்றிற்கு அப்பாற்பட்டது என்றும் சட்டத்தரணி மணிவண்ணன் இதன் போது வாதிட்டார்.

இந்தச் செயற்பாடானது யாழ்.மக்களின் மனங்களைப் புண்படுத்தி, காயப்படுத்தி, அவர்களைக் கொந்தளிப்புக்கு உள்ளாக்கியுள்ளது என்றும், சுடலை இல்லாத பிரதேசத்தில் சடலமொன்றை எரிப்பதற்கு மாநகர சபையின் அனுமதியைப்பெறவேண்டும்எனச்சட்ட ஏற்பாடுகள் குறிப்பிடுகின்றன என்பதையும் அவர் மன்றில் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு கோல்பேஸ் போன்ற பொதுமக்கள் , சிறுவர்கள் நடமாடும் பகுதியில் இதனைச்செய்ய முடியுமா எனவும், குறித்த பகுதியில் உடலைத் தகனம் செய்வதற்கு யாழ். மாநகரசபையே அனுமதியளிக்கவேண்டும் எனவும், தகனம்செய்வதற்குத்தடைவிதிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் வாதிட்டார்.

இதனைதொடர்ந்துமன்றில் முன்னிலையாகியிருந்த சிரேஷ்டபொலிஸ்அத்தியட்சகர், அந்த உடல் தகனம் செய்யப்படும் இடமானது தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமானது என்றும், அதற்கான அனுமதியைத் தொல்பொருள் திணைக்களம் வழங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுடன் இந்த மரண நிகழ்வை இராணுவம் ஏற்பாடு செய்துள்ள நிலையில் அதனை நிறுத்தினால் அது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் என்றும் மன்றில் குறிப்பிட்டார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான், தேரரின் பூதவுடலைத் தகனம் செய்ய அனுமதிக்கப்படுவதாகத் தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்தார்.

யாழ்ப்பாணம் நாகவிகாரை விகாராதிபதி மீகாஹாயந்துர ஞானரைத்தன தேரர் கடந்த 19 ஆம் திகதி கொழும்பு வைத்தியசாலையில் இயற்கை எய்தினார். யாழ் ஆரியகுளம் பகுதியில் அமைந்துள்ள நாகவிகாரையின் விகாராதிபதியாகக் கடந்த 1991 ஆம் ஆண்டில் இருந்து வந்த இவர் தனது 70 ஆவது வயதில் இயற்கை எய்தினார். (ஐ -7)

## மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞானசார தேரர்.

யாழ். விகாராதிபதியின் உடல் தகனம் செய்யும் நிகழ்வு பல்வேறு சர்ச்சைகள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. பொதுபல சேனாவின் தலைவர் ஞானசார தேரரும் இதில் கலந்துகொண்டார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் உள்ள மக்கள் தற்போது தமது அன்றாடப் பிரச்சினையைக் கூடத் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையே உள்ளது. அவ்வாறு மக்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகளை மழுங்கடிக்கும் நோக்கிலேயே புதிய அரசமைப்புத் தொடர்பில் பேசப்படுகின்றது.

மக்கள் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போதெல்லாம் அரசமைப்புத் தொடர்பான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை ஒழிப்புத் தொடர்பாக பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

வடக்கு – தெற்கு மக்களின் கஷ்டங்கள், துன்பங்கள் தொடர்பில்நாங்கள்பார்த்துக்கொண்டு தான் இருக்கின்றோம். இங்கு அவர்கள் தமது அன்றாடப் பிரச்சினைகளையே பார்த்துக் கொள்ள முடியாத நிலைமையே உள்ளது.

இதனால் மக்களுக்குப் புதிய அரசமைப்புத் தொடர்பில் அக்கறையில்லை. அத்தோடு மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தப் புதிய அரசமைப்பு பிரயோசனமற்றது –என்றார். (ஐ-7)

## முற்றைவெளியில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். முற்றவெளியில் தகனம் செய்யப்பட்டது. முன்னதாக அவரது உடல் யாழ். நகர வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

இதில் இலங்கை இராணுவத் தளபதி, வடக்கு மாகாண ஆளுநர், சர்வ சமயத் தலைவர்கள், பெரும் எண்ணிக்கையான பிக்குகள், இராணுவத்தினர் பங்கேற்றனர். (ஐ-7)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எப்பட்ட இருவரும் தற்போது நல்ல நிலையில் உள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாள்களாக இந்தச் சத்திரசிகிச்சைகள் யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியாவைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் மற்றும் விசுவமடுவைச் சேர்ந்த 27 வயதுடைய இளம் பெண் ஆகிய இருவருமே சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் சுமார் 12 வருடங்களாகச் சத்திர சிகிச்சையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். சத்திரசிகிச்சைக்கு உள்படுத்தப்பட்ட பின்னர் இருவரும் நலமுடன் உள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சைநிபுணர்சிதம்பரநாதன் முகுந்தன் தலைமையில் 5 மருத்துவர்கள் மற்றும் மயக்க மருந்து மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள் அடங்கியகுழுவினர் இணைந்து இந்தச் சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

எதிர்காலத்தில் தொடர்ச்சியான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். அதற்குச் சில வளக் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை நிவர்த்தி செய்யப்படும் பட்சத்தில் தொடர்ச்சியாக இந்தச் சேவையை மக்களுக்கு வழங்கமுடியும் என்று இருதய சத்திர சிகிச்சை நிபுணர் சிதம்பரநாதன் முகுந்தன் தெரிவித்தார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது என சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் இருப்பது நல்லாட்சி,நல்லிணக்கம்அல்ல எனவும், அவை அனைத்தும் தமிழ் மக்களை ஏமாற்றப் போடப்படும்வேஷங்கள்எனவும் அவர் கடுமையாகச் சாடினார்.

விகாராதிபதியின் உடலை முற்றவெளியில் தகனம் செய்யத் தடை விதிக் கோரி நேற்று யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் முடிவில்நீதிமன்றுக்குவெளியே ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

பௌத்தர்களேவாழாத இடத்தில், இராணுவத்தின் ஏற்பாட்டில் ஒரு பௌத்த தேரரின் உடல் பொது இடத்தில் வைத்துத் தகனம்செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது இந்த மக்களின் உணர்வைப்புண்படுத்தும் செயற்பாடாகும்.

ஆனால் அத்தகைய ஒரு செயற்பாட்டை தட்டிக் கேட்க முடியாதவாறு அவல நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். நாட்டில் நல்லாட்சி, ஆட்சி மாற்றம் என்று கூறியது அனைத்தும் வேம் என்பதை இந்தச் செயற்பாடு தெளிவுப் டுத்துகின்றது – என்றார். (ஐ-7)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காய்ச்சல் ஏற்பட்டதால் சுகவீனமுற்றார். அவர் நேற்று முன்தினம் காலை கொழும்பு நவலோ கா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நேற்று அவரது உடல்நிலை வழமைக்குத்திரும்பியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் இன்று அல்லது நாளை வீடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நிறம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெல்லம்பிட்டிய விலுள்ள கராஜ் ஒன்றில் வைத்தே வெள்ளை நிறம் பூசப்பட்டுள்ளதாகவும், அதற்கு முன்னர் அது நீல நிறமாக இருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் ( சீ.ஐ.டி ) பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வா, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில்நேற்றுதெரிவித்தார்.

நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில்வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த வான், கடற்படையின் லெப்டினன்ட் கொமாண்டர் முனசிங்கவினால் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாகக் கூறப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பவேண்டிய விசாரணை அறிக்கைகளை ஒப்புநோக்கும்பணிஇடம்பெற்று வருவதாகவும் சீ.ஐ.டியினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

அதன் பின்னர், சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான உதய கம்மன்பில கோரிக்கையொன்றை முன்வைத்தார்.

ஏற்கெனவே, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்கு மூலம்வழங்கியசாட்சியாளரான கே.எம். விஜயகாந்த் என்பவர் நீதிமன்றத்தின்முன்னிலையில் வாக்குமூலம் வழங்க விரும்புகிறார் எனத் தெரிவித்தார்.

இவ்வருடம் இரண்டாவது தடவையாக வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்த குறித்த சாட்சியாளருக்கு 2015ஆம் ஆண்டு வழங்கிய சாட்சியம் வாசித்துக் காட்டப்பட்டதாக அறிவித்த சட்டத்தரணி உதய கம்மன்பில, அதில் வேறுபாடுகள் இருப்பதைச் சாட்சியாளர் கண்டறிந்துள்ளார் என்றும் அவருக்கு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கச் சந்தர்ப்பம் வழங்குமாறும் கோரினார்.

சாட்சியாளருக்குச்சிங்களம் எழுதவோவாசிக்கவோமுடியாது என்றும்புரிந்துகொள்ளமுடியும் என்றும் பேச முடியும் என்றும் தெரிவித்த உதய கம்மன்பில, அவரின் வாக்குமூலத்தைப் பெறுமாறு கோரினார்.

முதலாவதாக வாக்குமூலம் பெறப்பட்டபோது, வாசித்துக் காட்டப்பட்டேகையெழுத்துவாங்கப்பட்டதாக சீ.ஐ.டியினரால் அறிவிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் வாக்குமூலமளிக்க ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து, சாட்சியாளர் அழைக்கப்பட்டார்.

அவரிடம் சிங்களமொழி தொடர்பில் நீதிவான் வினவிய போது, தன்னால் புரிந்து கொள்ள முடியும் என்றும் பேச முடியும் என்றும் சாட்சியாளர் தெரிவித்தமையுடன், தான் தமிழிலேயே சாட்சியம் வழங்க விரும்புகின்றார்எனக்கூறினார்.

நீதிமன்றவிடுமுறைக்காலம் என்பதால்மொழிபெயர்ப்பாளர் விடுமுறையில் சென்றுள்ளார் எனவும் இந்த வழக்குக்காக மொழிபெயர்ப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் அனுப்புமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

மேலும், சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு இன்னும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும், ஒன்பது மாத காலமாக சந்தேகநபர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவித்த சட்டத்தரணி அசித் சிறிவர்த்தன, அறிக்கைகள் அனுப்புமாறு சில தடவைகள் உத்தரவிடப்பட்டுள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பான அறிக்கை இறுதி நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த நீதவான், அடுத்த முறை அனுப்பத்தவறின் உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும் என அறிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க உட்பட அறுவரையும் எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டதுடன், தலைமறைவாகியுள்ள கொமாண்டர் பிரசாத் ஹெட்டியாராச்சிக்குப் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு, தெஹிவளையில் வைத்து ரஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஷ்வரம் ராமலிங்கம், மொஹம்மட் நிலான், மொஹம்மட் சாஜித் ஆகிய மாணவர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

அதே ஆண்டு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன், றொான் லியோன், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையைச் சேர்ந்த கனகராஜா ஜெகன், தெஹிவளையைச் சேர்ந்த மொஹம்மட் அலி அன்வர் ஆகியோரும் கொழும்பில் கடத்தப்பட்டிருந்தனர். (ஐ)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க யாழ்.மாவட்ட செயலர் நாகலிங்கம் வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ் மாவட்ட செய லகத்தில் இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் படையினரின் வசமுள்ள காணிகள் தொடர்ச்சியாக விடுவிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் மாவட்ட செயலர் இதன்போது இராணுவத் தளபதிக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் பல காணிகள் மற்றும் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலைகள், வைத்தியசாலைக் கட்டடங்கள் போன்றவற்றையும்விரைவில்விடுவித்து மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துமாறும் மாவட்ட செயலர் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பில் தாம் சாதகமான பதில் ஒன்றை விரைவில் வழங்குவார் என்று இராணுவத்தளபதிதெரிவித்தார் என யாழ் மாவட்ட செயலர் நாகலிங்கம் வேதநாயகன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ஐ)

## பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரந்தன் நோக்கிப் பயணித்த மோட்டார்சைக்கிளும், பரந்தன் பகுதியிலிருந்து பூநகரி நோக்கி பயணித்த டிப்பர் வாக னமும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதானா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விளையாட்டு அமைச்சின் 50 ஆண்டு பூர்த்தி; நினைவு முத்திரை, அஞ்சல் உறை வெளியீடு

விளையாட்டு அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டுநினைவுமுத்திரையும் முதல்நாள்அஞ்சல்உறையும் வெளியிடும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன் தினம் பிற்பகல் நடைபெற்ற இந்த நிகழ்வில் விளையாட்டு அமைச்சின் செயலாளர் ஜயந்த விஜயசேகரவால் நினைவு முத்திரை மற்றும் முதல்நாள் அஞ்சல் உறை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் லண்டன் நகரில் இடம்பெற்ற பரா ஒலிம்பிக் போட்டியின் போது ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற தினேஸ் பிரியந்த ஹேரத்திற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10 லட்சம் ரூபாவும் விளையாட்டு அமைச்சின் நிதியத்திலிருந்து 15 லட்சம் ரூபாவும் வழங்கப்படுவதற்கான காசோலைகள் ஜனாதிபதி இதன்போது அவரின் பயிற்சியாளரான பிரதீப் நிசாந்த அப்புகாமியும் இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் விளையாட்டு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சமன் பண்டார, தேசிய தேர்வுக்குழுத் தலைவர் ஜெனரல் தயாரத்னாயக்க, விளையாட்டு அமைச்சின் ஆலோசகர் சுசந்திகா ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.



# இலங்கையின் பல பகுதிகளிலும் பலத்த காற்று வீசும் சாத்தியம்!



கொழும்பு, டிசெ. 23

இலங்கையின் மொனராகலை, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும், சில கடற்கரை பகுதிகளிலும் பலத்த காற்று வீசும் சாத்தியம் காணப்படுவதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் தொடர் பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மொனராகலை, மாத்தறை மாவட்டங்களின் சில பகுதி களில் பலத்த காற்று வீசும் சாத்தியம் காணப்படுகிறது.

அத்துடன், காங்கேசன்துறையில் இருந்து புத்தளம் வழியாக கொழும்பு வரையிலும், காலியிலிருந்து மாத்தறை வழியாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்பகுதியில் மணித்தியாலத்திற்கு 55 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதேவேளை, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்ளிலும் மழை பெய்வதற்கான சாத்தியமும் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2018 - உலகக்கிண்ண உதைபந்து போட்டி:

# வெற்றிக் கிண்ணப் பயணத்தின் முதலாவது நாடாக இலங்கை!

கொழும்பு, டிசெ. 23

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில் உலகக்கிண்ண உதை பந்து போட்டி தொடரின் வெற்றிக்கிண்ணத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் பயணத்தின் முதலாவது நாடாக இலங்கை தெரிவுசெய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்து போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சகல மக்களும் கண்டுகளிப்பதற்காக 54 நாடுகளுக்கு கொண்டு செல்லப்படவுள்ளதுடன் அவ்வாறு கொண்டு செல்லப்படவுள்ள முதலாவது நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் அதிகாரிகளும் அனுசரணைவழங்கும்நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இதனை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி பிற்பகல் இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளவெற்றிக்கிண்ணம் ஜனாதிபதியிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.



உலகக்கிண்ண உதைபந்து போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை உலகிற்கு அறிமுகம் செய்யும் சந்தர்ப்பம் இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளமை எமது நாட்டுக்குக்கிடைத்துள்ள வெற்றியாகவும் அபிமானமாகவும் கருதப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத் தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ள இந்த வெற்றிக் கிண்ணம், அன்று பிற்பகல்மாலைதீவுக்குக்கொண்டு செல்லப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் விளையாட்டு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சமன் பண்டார, தேசிய தேர்வுக் குழுத் தலைவர் ஜெனரல் தயாரத்னாயக்க, விளையாட்டு அமைச்சின் ஆலோசகர் சுசந்திகா ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## போதைப்பொருள் பாவனை:

# மக்களைப் பாதுகாக்கும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்!




முல்லைத்தீவு, டிசெ.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் மதுப்பாவனை என்பவற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருள் அற்ற நாட்டை உருவாக்குவோம் என்ற தொனிப் பொருளில் உலக தரிசனம் நிறுவனத்தால் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், போதைப் பொருள் பாவனைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், விழிப்புணர் வுப் பதாதைகள் அமைக்கப்பட்டுள்ளனஅத்துடன்,துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.மேலும், இந்த வேலைத் திட்டங்கள்நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணகம்
மகிழ
19.11.1944

விண்ணகம்
நெகிழ
24.11.2017

## லயன்
## செல்லத்துரை மகாதேவா
(MJF, JP)

வைத்தியசாலைதனில் மாரடைப்பு என்றதுமே
பைத்தியம் பிடித்தாற்போல் மார்அடைத்து நாம்நின்றோம்
காத்திரமாய்விரைந்து நாமுமைநோக்கி வந்தோம்—அப்பா
எத்துணை வார்த்தைகளால் உம்மன்பை வடித்திடுவோம்?

அன்புடையீர்!
கடந்த 24.11.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன் லயன் செ.மகாதேவா அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (24.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
077 704 1767

குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.